Annual Subscription Rs. 6 | Vol. 7. | No 52 | 31st January 1937. | Price 2 As.

# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



திருச்செங்கோடு மலை அடிவாரப் படிக்கட்டுகள். இரு பக்கமும் சுமார் 40 அடி நீளமுள்ள இரு நாகங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன.




அடைவதற்கு இயற்கையான

விருப்பம்

வுட்வர்ட்ஸ்

கிரைப்வாடர்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்




# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

அவன் கொலையுண்டானென்ற திடுக்கமான துக்கச் செய்தியையும் கேள்வியுற்ற ராதா தான் யாதொன்றுமறியாதவள்போல் பேசாதிருந்தாள். பாட்டிமாருடைய பார்வைக்கும், ராதாவின் மனம் வழக்கம்போலிருந்ததாய்த் தோன்றிற்றேயன்றி, ஏதேனும் சலனமடைந்ததாய்த் தோன்றவேயில்லை. தனது சொந்த நாயகனுக்கே உயிர் மோசம் நேர்ந்த துக்கச் செய்தியைக் கேட்டும், திடுக்கமடையாத பெண்கள் உண்டா? இல்லையே? அங்ஙனமிருந்தும் ராதா இவ்வளவு நிச்சிந்தையாயிருந்தது பாட்டிமார்க்கு அளவற்ற ஆச்சரியத்தை விளைத்தது.

நன்மை தீமைகளைப் பகுத்தறியக்கூடாத மடப் பெண்களைப் போலின்றி, ராதா ஆண்மக்களும் நாணும் புத்திக் கூர்மையும் அசாதாரணமான உலக ஞானமும் வாய்ந்தவளாயிருந்தும் அவள் தனக்கு நேர்ந்திருக்கும் சகித்தற்கரிய துக்கத்தைச் சற்றுமறியாதவள் போலும், யாதொரு சம்பந்தமுமற்ற அயலாள்போலும் நடந்துகொண்ட விதமானது பாட்டிமாரின் ஆச்சரியத்தை அதிகரிக்கச் செய்தது. ஆயினும், அவளை உற்று நோக்கியவர்கள் ஒரு குறிப்பை மட்டும் அறிந்திருக்கலாம். அதாவது ராதா சோபனத்திற்கு முன் அகத்துறவும் சோபனத்தின் பின், புறத்துறவும் பூண்டவள் போல், ஆடையாபரண முதலிய அலங்காரங்களை முன்னரே தற்செயலாய்க் குறைத்து விட்டாளென்பது முன் ஓர் அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. சோபனத்தின் முன் ஏகதேசமாய் நதியில் ஸ்நானம் செய்துகொண்டு வந்த வழக்கத்தை சோபனத்தின்பின் விட்டுவிட்டாலும், இதுவரை வீட்டின் முன் முற்றம், பின் முற்றம், பூந்தோட்டம் முதலியவிடங்களுக்கு வருதலும் போதலுமுண்டு. ஆனால், தண்டபாணியின் உயிர் மோசத்தை யறிந்த கால முதல், ராதா பகற் பொழுதில் வீட்டின் முன் நடைக்கே வருவதில்லை. பூந்தோட்டத்தில் காலெடுத்து வைப்பதுமில்லை. வேண்டுமென்று அவளைப் பார்க்கவந்தவர்களையன்றி மற்றவர்கள் அவள் முகத்தைத் தற்செயலாய்க் காண்பதும் அரிதாயிற்று. அயல்வீட்டுப் புருஷர்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்குங் கூடத் தன் முகத்தை மறைத்துக் கொள்பவள் போல் ராதா வீட்டிற்குள் அடங்கிவிட்டாள்.

இதுவரை, தண்டபாணியின் சந்தேக மரணத்தைப் பற்றிப் பாட்டிமார் அந்தரங்கமாய் வைத்திருந்த ரகஸ்யம் பரதேசித் தபாலாகப் பூந்துறை கிராம முழுதும் பரவிவிட்டது. பரவவே, பாட்டி அன்னபூரணியின் பந்துக்களும் அயலாரும் வந்து வந்து ராதாவைப் பார்க்கத் தொடங்கினார்கள். அவருள், உண்மையாகவே துஷ்டி விசாரிக்க வருவோர் சிலர்; மரணம் சந்தேகமாயிருப்பதால், ராதாவின் கோலத்தைப் பார்க்க வேடிக்கையாய் வருவோர் சிலர்; அவள் முகத்தை உற்றுப்பார்ப்போர் சிலர்; அவளிடம் பேசி அவள் கருத்தையறிய முயல்வோர் சிலர். இவ்வாறு ராதா தனக்கு இயல்பாய் நேர்ந்திருக்கும் உட்கவலை காட்டப்பட்டதும் போதாமல், அயல்வீட்டாரின் அநாவசியமான தொந்தரவுகளுக்குமாளானாள். நாயகனிறந்த பின்னும், ராதா விதவைக்குரிய வெளிவேஷமின்றியிருத்தலைக் கண்டோரும் கேட்டோரும் தமக்குள் பற்பலவிதமாய்ப் பரிகாசம் செய்தார்கள். இந்தப் பரிகாசத்தையும் இழிவையும் சகியாது ராதா அளவற்ற வருத்தமடைந்தாள்.

என்ன செய்வாள்? ஊரார் வசைக்குப் பயந்து ராதா தன் தாலியைத் தானே அறுத்தெறிந்து விடுவாளா? அப்படி யெறிவதானால், தண்டபாணி இறந்தானென்பதற்கு நிச்சயமான ஆதாரமென்ன? இறந்தானென்றே வைத்துக் கொண்டாலும், இறந்த மாதமெது; நாளேது? உலகவழக்கப்படி, தண்டபாணியின் சொந்த வீட்டிலேயே யாதொரு மரணக் கிரியைகளும் நடக்கவில்லையே? அயலூராகிய பூந்துறையில் அயல் வீட்டில் வாழும் ராதா திடீரென்று தன்னிஷ்டப்படி விதவைக் கோலம் பூணுவதெப்படி?-என்ற இவை போன்ற சந்தேகங்களினால் பாட்டிமார் பேசாதிருந்தார்கள். ராதாவின் உள்ளக் கருத்தின்னதென்பது ஒருவர்க்கும் தெரியாது. இடையில் அயலாரும் ஊராரும் பரிகாசம் செய்யும்படி ஏற்பட்டுவிட்டது. "பாபியாகிய தண்டபாணி இருந்தும் கேவலம், இறந்தும் கேவலம்" என்றெண்ணிக்கொண்டு பாட்டிமார் நந்தகோபர் வரவையெதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த சமயம் ராதா "தெய்வமே, நான் இதுவரை பற்பல கொடிய துக்கங்களுக்காட்பட்டும், ஊரார் பழித்துப் பேசும் குறைக்கு மட்டும் ஆளாகாதிருந்தேன். முடிவில் என் வாழ்வு பார்த்தோர் நகைக்கும்படி அதிகேவலமாயிற்றே!" என வருந்தி ஒரு யோசனை செய்தாள். "இனி, பூந்துறையை விட்டு நீங்கி, தன்னை இன்னாளென்றறியாத அயலூரில் கொஞ்ச நாளைக்கேனும் குடியிருப்பதே உசிதமென்று தீர்மானித்தாள். அதற்கேற்ற ஒரு சந்தர்ப்பமும் தானே அமைந்தது. பூந்துறையில் சில தினங்களாய் சிறு குழந்தைகளுக்கு அம்மையென்னும் தொற்றுவியாதி


## உன் குழந்தையின் உத்தமமான துணைவன்.

சுத்தமாகவும் சிறப்பாகவும் மருந்தூட்டிய குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் குழந்தையின் இளமையான தோலைத் தேற்றி, உல்லாசமான வாசனை உண்டாக்கும். குழந்தைக்கு ஸ்நாநம் செய்த பிற்பாடு குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளை உடம்பின்மேல் தூவினால், பதரும், எரிப்பும் வராதபடி காப்பாற்றும். குழந்தையின் தோலை சரியான பக்குவத்தில் வைக்கச் செய்யும்.




குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் நேர்த்தியாகவும் பரிசுத்தமாகவு மிருப்பதினால், உலகமுழுதலும் வைத்தியர்களும், தாதிகளும் இதை குழந்தையின் கட்டிளமைத் தோலுக்கு உபயோகப்படுத்தும்படியாக புகழ்ந்தோப்பு வித்திருக்கிறார்கள். இந்த காரணத்தினாலேதான் ஸ்திரீகளும் இந்தத் தூளை ஸ்நாநம் செய்த பிற்பாடு உபயோகித்து சந்தோஷ மடைகிறார்கள். அதுவுமல்லாமல், இந்தத் தூளை உபயோகித்து ஸ்திரீகள் பதரையும் எரிப்பையும் போகச் செய்து களிப்படைகிறார்கள். அது வேர்வையைத் தணிக்கிறது; தோலின் சூடான மினுக்கத்தை நீக்கி, தேகத்துக்கு முழுதலும் இனிப்பான வாசனை கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் வாங்க அகப்படும்.

### குடிகூரா டால்கம்
### CUTICURA TALCUM

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வேண்டுமென்று இன்றைக்கே கேள்.



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

### கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



### வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபட்டக் கூறுவதாம்.



பண்டிட் M R K. மூர்த்தி
ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி,
ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி.டி. மதராஸ்.



காளத்தி.—இவளுக்கென்ன தெரியும்? பாற்கடல் சங்கதி பூந்துறையிலிருக்கிற மனுஷிக்கு எப்படித் தெரிந்துவிட்டது? அருமை மகள் எழுதிவிட்டாளென்று...

தோன்றி அன்னபூரணி தெருவிலும் பாவிற்று. இதையே ராதா ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, இனிப் பூந்துறையில் தாமஸித்தால் மாதவனுக்கு நன்மையல்லவென்று பாட்டிமார்க்கு எடுத்துக்கூறி, இருவரும் இசையும்படிச் செய்துவிட்டாள். சில தினங்கள் கழித்து, ராதா மாதவனையும் பாட்டிமாரையுமழைத்துக்கொண்டு அவசியமான சாமான்கள் சகிதம் ஒரு நாளிரவே புறப்பட்டு ஆற்றின் கீழ்க்கரையில் ஒன்றரை மயில் தூரத்திலுள்ள கொத்துவால் தோப்பு என்னும் கிராமத்தில், கீழப்பாளயம் சுலோசன நாயுடு பங்களாவுக்கடுத்த, ஒரு தோட்ட வீட்டில் வாடகைக்குக் குடியிருந்து வந்தாள். இதுவரையும் தன் பிதாவுக்கு யாதொரு கடிதமுமெழுதும் வழக்கமில்லாத ராதா, கொத்துவால் தோப்புக்கு வந்தபின், பாற்கடல் விசேஷத்தைப்பற்றியும், பிதாவின் அனுமதியை எதிர்பார்த்துக் கீழூருக்கு வந்துவிட்டதைப்பற்றியும் ஒரு சுருக்கமான கடிதமெழுதி நந்தகோபருக்கனுப்பினாள்.

இந்தக் கடிதம் போகுமுன்னமே, ப்ரஸ்தாபத்தாலும் மொட்டைக் கடிதங்களாலும் தண்டபாணியின் உயிர் மோசத்தைப்பற்றி அரைகுறையாய்க் கேள்விப்பட்டிருந்த நந்தகோபர் ராதாவின் கடிதத்தைக் கண்டு சகல சந்தேகமும் நீங்கியவராய், தன் அருமைப் புதல்வியின் கதியை நினைந்து அளவற்ற துக்கமடைந்தார்; "ஐயோ! ஐயோ" வென்று பெருமூச்செறிந்தார். "அந்தப்பாபி சண்டாளப் பாபி என் குடியை அடியோடு கெடுத்துவிட்டானே! இதற்காதியில் அவன் என் குழந்தையைப் பெண் கேட்டுவந்தான்! என் மகளைக் கெடுத்துத் தன் மகளை வாழவைக்க வேண்டுமென்றுதான் இத்தனை மோசமும் செய்தானோ அந்த நச்சு முதலி!" என்று பல்லைக் கடித்தார்; முகத்திலடித்தார்; மண்டையை மேஜையோடு மோதி உடைத்தார். இதைக் கண்டு திடுக்கிட்ட, அவர் மனைவி காளத்தி:—என்ன சங்கதி! என்ன விசேஷம்! (என்று தலையைத் தாங்கினாள்)

நந்த:—(கோபத்துடன்) அந்தக் கொலை பாதகன் உன் அப்பன் என் பிள்ளைக்குடியைக் கெடுத்து விட்டானே! அவன் நல்ல யோக்கியனென்று சொல்லிக்கொண்டிருந்தாயே! இதோ பார் (என்று கடிதத்தை வீசினார்)

காளத்:—இவளுக்கென்ன தெரியும் ராதாவுக்கு? பாற்கடல் சங்கதி பூந்துறையிலிருக்கிற மனுஷிக்கு எப்படித் தெரிந்துவிட்டது? அருமை மகள் எழுதிவிட்டாளென்று உங்களுக்கு ஒப்பி, அதற்காக மண்டையை உடைக்கிறீர்களே! என் அப்பா பேரில் சொல்வது கட்டுப்பாடு. எந்தப் பாவி கொன்றானோ?

நந்த:—அடி மலட்டு முண்டை, உன் பிள்ளை அறுத்தால் உன் மனம் கலங்கும். உன் அப்பன் யோக்கியனென்றால், தண்டபாணியைக் காணவில்லையென்று ஒரு கடிதமாவது போட்டானா? கடிதமுமனுப்பாமல் அவன் மண்போலிருப்பதை நினைத்தால், உன் அப்பன்தான் என் மருமகனை மோசம் செய்துவிட்டானென்பதில் சந்தேகமில்லை.

காள்:—உங்கள் மருமகன் பொய்ச் சாக்ஷி சொல்லி, என் அப்பா ஜெயிலுக்குப் போனார்கள். நீங்களும் சாக்ஷி சொன்னீர்கள். அவனைப்பற்றி உங்களுக்கு எழுத வேணுமென்று என் அப்பாவுக்கு என்ன ஆத்திரம்?

நந்த:—அடி நாயே, தண்டபாணி உன் அப்பனுக்கு விரோதியானாலும் என் மருமகனல்லவா?

காள:—யார் மருமகனானாலென்ன? நீங்கள் மாமனாருக்கு வைத்த மரியாதை கொஞ்சமோ? ஜெயிலிலிருந்து வந்தவரை நீங்கள் ஒரு தரமாவது பார்த்தீர்களா? "சத்திரம் சொத்தையெல்லாம் உங்கள் மருமகன் அமுக்கிக் கொண்

(35-ம் பக்கம் பார்க்க.)

நீரிழிவு, மதுமேகம்
முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்
மயூரகாய கற்பம்
ஒரு தெய்வீக சஞ்சீவி !!
இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு
இன்றே எழுதுங்கள்.
ஸ்கந்தாசிரமம்
தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

ஜலதோஷத்தால் தூக்கம் கெட்டால்
உஷாராக விருங்கள்!



ஜலதோஷத்தால் ராத்தூக்கம் கெட்டால் உங்கள் தேக வலிவு குன்றி, ஜீவசக்தி அழியும். மூக்கு அடைபட்டுக் கிடந்தால் மிஸ்டலை உபயோகிக்கத் தொடங்குங்கள். ஜலதோஷம் பரவாது. விரைவில் சுவாச கஷ்டம் நீங்கி, அயர்ந்து தூங்குவீர்கள். இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்கிக்கொள்க.




Mistol
REG. TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி விடுகிறது.

# பிச்சுவின் பால்ய லீலை

(ஸ்ரீமான் எஸ். இராமசுப்ரஹ்மண்யன், பி. ஏ.)

பிரும்மஸ்ரீ எக்ஞேஸ்வர தீக்ஷிதரையும் இப்புண்ணியபூமியில் அடிக்கடி அவதரிக்கும் தீர்க்கதரிசிகளில் ஒருவராகக் கணக்கிட வேண்டியதுதான். தீர்க்கதரிசன சக்தி அவருக்கில்லையானால் எப்படி தனது சீமந்த புத்திரனை 'பிச்சு' வென்று அவர் நாமகரணம் செய்திருக்க முடியும்?

பிச்சுவின் ஜன்ம லக்னம் விருச்சிகம். எனக்கு ஜோதிட சாஸ்திரம் தெரியாது. ஆகவே இந்த ஜாதகனுக்கு ஜன்மலக்னத்தின் பலன் என்னவென்பதை விவரிப்பது எனக்கு சாத்தியமன்று. பிச்சுவின் பால்ய லீலைகளை இங்கு கொஞ்சம் விவரிக்கிறேன். உங்களுக்கு சோதிடம் தெரியுமானால் ஜன்மலக்ன பலன் சரியாயிருக்கிறதாவென்று பார்த்துக் கொள்ளுங்கள்.

* * * *

முப்பது வருஷங்களுக்கு முன்னால் பிச்சுவின் பால்ய அவஸ்தையில் பின்வரும் சம்பவம் நிகழ்ந்தது. அன்று மஹாளய அமாவாசை. காலஞ்சென்ற தனது தகப்பனார், பாட்டனார், கொள்ளுப் பாட்டனார். எள்ளுப் பாட்டனார் மற்றுமுள்ள நவ தானியப் பாட்டனார் ஆகியவர்களின் பிதுர்கடம் தீர வேண்டி எக்ஞேஸ்வர தீக்ஷிதர் தர்ப்பணம் செய்துகொண்டிருந்தார். திடீரென்று அவர் பக்கத்திலுட்கார்ந்திருந்த குழந்தை பிச்சு கண்ணைப் பிசைந்துகொண்டு கத்த ஆரம்பித்தான். "என்னப்பா அழுகிறாய்?" என்று தகப்பனார் கெஞ்சிக் கேட்டார். இதற்குள் தாயாரும் பாட்டியும் ஆளுக்கொரு பக்கமாகக் குழந்தைக்கு சுச்ருஷை செய்தார்கள்.

"நானும் தர்ப்பணம் செய்வேன்" என்று பிச்சு பிடிவாதம் செய்தான். தீக்ஷிதருக்கு முகத்தில் கடுகு வெடித்தது. பிச்சுவை ஓங்கி ஒரு அறை அறைந்தார்.

சப்தலோகங்களும் கிடுகிடுக்கும்படி பிச்சு கத்த ஆரம்பித்தான். "அடபாவி, குழந்தையைக் கொன்றுவிட்டாயே, நல்ல நாளும் இதுவுமா. சின்னக் குழந்தைக்கு என்ன தெரியும்?" என்றாள் பாட்டி. "கிழட்டுச் சனியனே, பேசாமல் தொலை" என்று சீறினார் தீக்ஷிதர். இந்த சம்பவம் நடந்து ஒன்றல்ல, இரண்டல்ல, முப்பது வருஷங்கள் ஓடிவிட்டன. பிச்சு இன்னும் 'மைனராகவே' யிருக்கிறான். அவனுடைய மனோரதம் ஈடேறும் வழியைக்காணோம். எக்ஞேஸ்வர தீக்ஷிதர் சிரஞ்சீவிப்பட்டம் வாங்கிவந்திருக்கிறாரோ என்னவோ?

* * * *

"சேஷா, 'விளையும் பயிர் முளையிலே' என்று சொல்லுகிறார்களே, அது வாஸ்தவம் தானா?" என்று எக்ஞேஸ்வர தீக்ஷிதர் தனது ஆப்த நண்பரான சேஷா சாஸ்திரிகளைக் கேட்டார்.

"சந்தேகமென்ன? ஆஞ்சனேயர் ஜனித்தவுடனேயே சூரியனை எட்டிப்பிடிக்கவில்லையோ? விளையும் பயிர் அவசியம் முளையில் தெரியத்தான் செய்யும்" என்று சேஷா சாஸ்திரிகள் பதில் சொன்னார்.

"அப்படியானால் நம்முடைய குழந்தை பிச்சு இருக்கிறானே அவன் பெரிய சித்திரக் கலா நிபுணனாகிவிடுவான் பார்."

"ஏது?"

"நேற்று அடுப்பில் வைத்திருந்த பாலையெல்லாம் குடித்துவிட்டு, திருட்டுப்பயல் என்ன பண்ணியிருக்கிறான், தெரியுமோ? அடுப்பைச்சுற்றி பூனையின் கால்கள் மாதிரி சாக்பீஸால் வரைந்து வைத்திருக்கிறான்."

"குழந்தை சமர்த்துதான்!"

* * * *

பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சிரௌதிகள் பக்ஷவாத நோயினால் படுத்த படுக்கையாக இருந்து கொண்டு சரதல்பத்தில் சயனித்திருந்த பீஷ்மர்போல் ஸம்யமினீபுரப் பிரயாணத்திற்காக உத்தராயணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்குத் தன் பேரப்பிள்ளையான பிச்சுவிடம் வாத்ஸல்யம் அதிகம். ஆகவே அவனை நினைத்துப் புலம்பிக்கொண்டேயிருந்தார். "பிச்சு, தாத்தா கூப்பிட்டுக் கொண்டேயிருக்கிறார். பார் போய் அவருக்கு ஏதாவது ஆறுதல் கூறிக் கொண்டிரு" என்று தாயார் ஆக்ஞை செய்யவே அதைச்சிரமேல் வகித்து பிச்சு தாத்தாவிடம் சென்றான். "என் தாத்தா, உன் விசேஷத்திற்கு நம்முடைய ஆத்து மயிலைப் பசுவைக் கொடுத்து விடலாமென்று அம்மா வந்து அப்பாவிடம் சொல்கிறாள். அப்புறம் நான் எப்படிக் காப்பி சாப்பிடுவது? பசுவே வேண்டாமென்று சொல்லி விடேன் தாத்தா" என்று பேரன் கூறியதைக் கேட்டதும் தான். பெரியவருக்கு, "நாமெல்லாம் சமுத்திரத்தில் மிதக்கும் மரக்கட்டைகள். ஒரு காற்றால் சேர்க்கப்பட்டு மற்றொரு காற்றால் பிரிக்கப்படுகிறோம்" என்று வால்மீகி முனிவர் கூறியதின் தத்துவம் விளங்கிற்று.

* * * *

பிச்சுமணி பத்தாவது வகுப்பில் படித்தபொழுது பின்வரும் சம்பவம் நிகழ்ந்தது. அவன் படித்தது ஒரு மிஷன் கலாசாலையில். அதற்கு ஹெட்மாஸ்டர் ஒரு பாதிரியார். கோடை விடுமுறைக்குப் பின்னர் பள்ளிக்கூடம் திறந்ததும் முதல் புதன் கிழமையன்று பிச்சுவிடமிருந்து ஒரு லீவ் லெட்டர் அவருக்குக் கிடைத்தது. "இன்று நான் அப்யங்கனம் செய்ய வேண்டியிருப்பதால் அன்று மட்டும் தயவு செய்து ரஜாக் கொடுக்கவும்" என்று பிச்சு வேண்டிக் கொண்டிருந்தான். அப்யங்கனமென்றால் ஏதோ மதச் சடங்கு என்று எண்ணிக் கலாசாலைத்தலைவர் ரஜா அளித்துவிட்டார். பிறகு புதன் கிழமை தோறும் லீவ் லெட்டர் வரவே அவருக்குச் சந்தேகமேற்பட்டது.

பள்ளிக்கூடத்து சம்ஸ்கிருத பண்டிதரை அழைத்து விஷயத்தை அறிவித்தார். அப்யங்கனம் என்றால் எண்ணெய் ஸ்நானம் என்று அறிந்ததும் அவருக்கு ரௌத்திராகாரமாகக் கோபம் வந்துவிட்டது. அந்தக் கோபத்தில் பிச்சுமணியை ஒரு வாரம் சஸ்பெண்டு செய்துவிட்டார்.

சம்ஸ்கிருத பண்டிதர் சங்கர சாஸ்திரிகள் மஹா வைதீகமானவர். பிராதஸ்நானம் என்றுமே நதியில்தான். பிச்சுமணி சஸ்பெண்டு செய்யப்பட்டதற்கு மறுநாள் காலை அவர் ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். பாதையோ ஒற்றையடிப்பாதை. இரு பக்கமும் அடர்ந்த சப்பாத்திப் புதர்கள். திடீரென்று அவருக்கு எதிரே ஒரு கழுதை கத்திக்கொண்டே ஓடி வந்தது. "அப்யங்கனம் என்றால் என்ன தெரியுமா? கர்த்தபாரோகணம்தான்" என்று பிச்சுமணி கத்துவது காதில் விழுந்தது. என்ன செய்வது? வேறு வழியின்றிச் சாஸ்திரிகளும் சிறிது காலம் கழுதை சவாரி செய்தார்.

* * * *

பிச்சு வெறும் விஷமக்காரன் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். அவன் மகா புத்திசாலியுங்கூட. அவன் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது போட்டிப் பிரசங்கமொன்றில் வெற்றி பெற்ற கதையைக் கூறவா? கலாசாலையின் வருடாந்திரக் கொண்டாட்டத்தையொட்டி ஒரு பிரசங்கப் போட்டி நடைபெற்றது. "என்னை சர்வாதிகாரியாக்கினால்......" என்பது பிரசங்க விஷயம். போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கள் ஒவ்வொருவரும் சர்வாதிகாரியானவுடன் வானத்தை வில்லாக வளைக்கப் போவதாகவும் மணலைக் கயிறாகத் திரித்துவிடப்போவதாகவும் பேசினார்கள். பிச்சுமணி மட்டும் ஒரே வாக்கியத்தில் விஷயத்தை சுருங்கச்சொல்லி எல்லோருக்கும் விளங்கவைத்துவிட்டான். "என்னை சர்வாதிகாரியாக்கினால் உடனே ராஜினாமாச் செய்துவிடுவேன்" என்று பிச்சுமணி ஒரு போடு போட்டபொழுது சபையில் பலத்த கரகோஷம் ஏற்பட்டது. பிச்சுமணிக்குப் போட்டியில் ஒரு ஆறுதல் பரிசும் கிடைத்தது.

* * * *

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

சாலு சாலு நீயுக்துலு நடுவது, ஸாரஸாக்ஷ ஸ்ரீக்ருஷ்ண (சாலு)

அனுபல்லவி

சூலதாருல கருதைன மமுகூடி ஸௌகமு லனுபவிம்பவே ஸ்ரீ க்ருஷ்ண (சாலு)

சரணம்

1. அதரரதன மூலகனி சொக்குசுமே—மாசிம்சி வச்சிதிமி
புதரக்ஷக சல்ய ஸாரத்ய மௌனரிஞ்சி—பொங்குடெருக மைதிமி ஸ்ரீ க்ருஷ்ண (சாலு)
2. கண்ட சக்கரவம்டி பலுகுலுவினி மேமு—காமிம்சி வச்சிதிமி
உண்டியுண்டி பாலுனி கில்லிமறிதொட்ல—யூசுனனெருக மைதிமி ஸ்ரீ க்ருஷ்ண (சாலு)
3. த்யாகராஜநுதுடனி யதிப்ரேமசே—தருணுலு வச்சிதிமி
போகிசயன மாமடலு மீரகு—புத்திசாலி யௌதுஸௌமீ ஸ்ரீ க்ருஷ்ண (சாலு)

II

| | |
|---|---|
| ஸாரஸாக்ஷ | —செந்தாமரைக் கண்ணனே! |
| ஸ்ரீக்ருஷ்ண | —ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே! |
| புதரக்ஷக | —மெய்ஞ்ஞானிகளைக் காப்பவரே! |
| போகிசயன | —பாம்பணைப் பள்ளி கொண்டவரே! |
| சூல தருலகு அருதைன | —சூலதாருக்கும் கிடைத்தற்கரிய |
| மமு கூடி | —எங்கள்பால் வந்து |
| ஸௌகமுலனு பவிம்பவே | —ஸௌகங்களையனுபவிப்பீராக! |
| அதர ரதனமுல கனி | —உம்முடைய உதடுகளையும் பல் வரிசையையுங்கண்டு |
| சொக்குசு | —மோகித்து |
| மேமு ஆசிம்சி வச்சிதிமி | —நாங்கள் காதல் கொண்டுவந்தோம்! |
| சல்ய ஸாரத்ய மௌனரிம்சி | —பலவித சூழ்ச்சிகளைச் செய்துகொண்டு |
| பொங்குடெருக மைதிமி | —நீர் ஸந்தோஷிப்பதை யறியாமற் போனோம்! |
| கண்ட சக்கெரவம்டி | —கற்கண்டைப் போன்ற |
| பலுகுலு விநி | —உம் வார்த்தைகளைக் கேட்டு |
| மேமு காமிம்சி வச்சிதிமி | —நாங்கள் ஆசைப்பட்டு வந்தோம் |
| உண்டி உண்டி | —கூட இருந்திருந்து (நீர்) |
| பாலுனி கில்லி | —குழந்தையைக் கிள்ளி |
| மறி தொட்ல யூசுன னெருகமைதிமி | —மேலும் தொட்டிலையாட்டுவதை யறியாமற் போனோம்! |
| த்யாகராஜ நுதுடனீ | —த்யாகராஜனால் கொண்டாடப்பட்டவரென்று |
| அதி ப்ரேமசே | —மிக்க பிரேமையுடனே |
| தருணுலு வச்சிதிமி | —பெண்களாகிய நாங்கள் வந்தோம் |
| மாமாடலு மீரக | —எங்களுடைய வார்த்தையை மீறினால் |
| புத்திசாலி யௌதுஸௌமீ | —புத்திசாலியாகயிரும்! |
| நீயுக்துலு | —உம்முடைய யுக்திகள் |
| சாலு சாலு | —போதும் போதும்! |
| நடுவது | —இனி அவை செல்லா! |

(10-ம்பக்கம் பார்க்க.)

Broadcast

# பிராட்காஸ்ட்

## ரிகார்டு

## பிப்ரவரி வெளியீடு!

அம்பாநாது என்ற ரிகார்டில்
அமிர்தத்தை பொழிந்த செம்பை
**வைத்தியநாத பாகவதர்**



R. T. 2410
விலை ரூ. 4—8—0
ராமா நீயட
பாகம் 1 & 2 —காஹரய்ரியா

குன்னகுடி வெங்கடராமய்யர்
**B. 2412**
முந்நார வண
பாகம் 1 & 2— தோடி

வித்வான் மன்னார்குடி
**ராஜகோபால பிள்ளை**



G. R. 2415
எதுல ப்ரோதுவோ
பாகம் 1 & 2 —சக்ரவாகம்

தென்னிந்திய கோகிலகான
மதுரை சுப்புலக்ஷ்மி



G. R. 2416
விலை ரூ. 2—12—0
எனக்குன் இருபதம்
பாகம் 1 & 2 —ராகமாலிகை

## நூதன டிராமா ஸெட்

# ராதா கிருஷ்ண



Broadcast

நான்கு ரிகார்டில்
**கேட்போர் மனதை பக்திக்கடலில் ஆழ்த்துவது திண்ணம்.**

வித்வான் மஞ்சக்குடி
**ராமச்சந்திர பாகவதர்**
தியாக ப்ரஹ்மத்தின் சிஷ்ய
பரம்பரையைச் சார்ந்தவர்



B. 2413
எந்த நிநே வர்நிந்து நு—முகாரி
ராமச்சந்திர நீதய—சுரட்டி

# தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்

**313, எஸ்பிளனேட் - மதராஸ்.**

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொலம்பு.

12, வாடர்லு தெரு, கல்கத்தா.

16, ராப்பார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S. & S S.க்கு ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:—

**தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினாங்—சிங்கப்பூர்.**

III

இதுவும் ஸ்வாமிகளுடைய ஜௌகா சரித்ரக் கீர்த்தனையிலுள்ளது. கோபிமார்கள் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவை வேண்டிக்கொள்வதாக அமைந்தது. ச்ருங்கார ரஸமான பாட்டு.

ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் செய்கைகள் வெகு விசித்ரமானவை: பகவான் கபட நாடக ஸூத்ரதாரியல்லவா? அம்மாதிரியான செய்கைகளைத் தம்மிடத்தில் செய்ய வேண்டாமென்றும், தங்களை ஆட்கொள்ள வேண்டுமென்றும் கோபிமார்கள் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றனர்;

சூலதருல கருதைன:—'சூலதாராதுல கருதைன' என்றும் பாடம். ஆயின், 'சிவபெருமான் முதலியவர்களுக்கும் அரிய' என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

சல்ய ஸாரத்யம்:—சல்யன், பஞ்ச பாண்டவர்களில் நகுல சகாதேவர்களுக்கு அம்மான். பாரத யுத்தத்தில் அவன் பாண்டவர்கள் பக்கத்தில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று வரும்போது, துர்யோதனன் அவனை வழியில் ஸந்தித்து உபசரித்துத் தந்திரமாகத் தன் பக்கத்தில் சேரும்படி செய்தான். சல்யன் கர்ணனுக்குச் சாரதியாய் அமைந்தான். எனினும் அவனுடைய மனமெல்லாம் பாண்டவர்களுக்கு அனுகூலம் செய்வதிலேயே முனைந்திருந்தபடியால் அவன், கர்ணனைப் பலவிதங்களில் அதைரியப்படுத்தி ஓங்கவொட்டாமலே செய்து வந்தான் என்பது மஹாபாரதத்தில் உள்ள வரலாறு. ஆகவே பக்கத்திலேயே இருந்துகொண்டு சூழ்ச்சி செய்யும் தன்மைக்கு 'சல்யஸாரத்யம்' என்று பெயரமைந்தது. அம்மாதிரி சூழ்ச்சி செய்வதில் க்ருஷ்ணபரமாத்மாவின் திறமை கேட்கவேண்டுமா? 'நீர் பலவித சூழ்ச்சிகளைச் செய்து வருவதை நாங்கள் இதுவரை அறியாமற் போனோம்' என்று கோபிகள் முறையிடுகின்றனர்.

உண்டியுண்டி......யூசனன்:—மேலே கூறப்பட்ட மாதிரியில் ஒரு குறும்பான காரியம். பக்கத்திலிருந்து கொண்டு குழந்தையைக் கிள்ளிவிட்டு ஒன்று மறியாதவர் போல் தொட்டிலையாட்டுகின்றவருடைய செய்கைகள் எப்படியிருக்கும்?

புத்திசாலி:—நாம் சிறு பிள்ளைகளிடத்திலே அருமையிட்டுப் பேசும்போது 'சமத்தாயிரு' என்று சொல்கிறோமல்லவா? அதுபோல் தம்முளொருவர்போல விளங்கும் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவைக் கோபியர் 'புத்திசாலியாயிரு' என்கின்றனர்.

IV

**ஸாவேரி** **ஆதிதாளம்**

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 15-வதான 'மாயாமாளவ கௌளை'யிற் பிறந்தது. ஔடவ ஸம்பூர்ணம்; ஸரிமபதஸ்—ஸ்நிதபமகரிஸ என்று கிரமம். சுத்த ரிஷப, சுத்த மத்யம, சுத்த தைவதங்களும், அவரோஹணத்தில் அந்தரகாந்தாரமும் ராகச் சாயாஸ்வரங்கள். ஸரிக்ரிரிஸ ரிகரீஸ்ரிமா, என்று பேசும்போது காந்தாரம் அந்தர காந்தாரத்தினளவில் குறைந்து பேசுகின்றது. அவ்வாறே 'பதநிதப' 'தநிதம' என்று பேசும் போதும் நிஷாதம் காகலி நிஷாதத்தினளவில் குறைந்து பேசுகிறது. இந்த ஸந்தர்ப்பங்களில் இவை முறையே சாதாரண காந்தாரமும், கைசிகி நிஷாதமும் கமகத்துடன் பேசுபவை யென்றே கொள்ளத் தக்கவையாயிருக்கின்றன. பூர்விகர்கள் செய்துள்ள லக்ஷ்ய கீதங்களில் இவ்வாறே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'ஸநிஸ்' என்றும் 'மகம' என்றும் திரும்பும் இடங்களிலும் 'பதஸ்நிதா' 'ஸ்ரிமகா' என்பது போன்ற பிரயோகங்களிலும், அவரோஹண ஸஞ்சாரங்களிலும் காகலி நிஷாதமும் அந்தர காந்தாரமுமே பேசுகின்றன. ஆகையால் இது பாஷாங்கராகமாகும். 'தநிதமகரிஸா' என்பது போன்ற பஞ்சம வர்ஜ்யமான பிரயோகங்கள் மிகவும் ரஞ்சகமாயிருக்கின்றன. விசேஷமாகக் காலைவேளையிற் பாடப்படுகிறது.

பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸா ; ரீ | மா ; மா மா ; | பா தா | பா மா | கா ரீ | ஸா தா |
| சா ; லு | சா ; லு நீ ; | யு | க்துலு | நடு | வது |
| ஸா ; ரீ | மா ; மா பா ; | தா | பா தா ; | மா கா | ரீ ஸா |
| ஸா ; ர | ஸா ; க்ஷ ஸ்ரீ ; | கரு | ஷ்ணு ; | ...... | ...... |
| ஸாரீ காரீ ; | ஸாரீ மா | பா தா | பா மா | க்ா ரீ | ஸா தா |
| சா லு சா ; | லு நீ | யு | க்துலு | நடு | வது |
| ஸா ; ரீ | மா ; மா பா ; | தா | பா தா ; | பா மா | பா தா |
| ஸா ; ர | ஸா ; க்ஷ ஸ்ரீ ; | க்ரு | ஷ்ணு ; | ...... | ...... |
| பா மா காரீ ; | ஸாரீமா | பா தா | பா மா | கா ரீ | ஸா தா |
| சா லு சா ; | லு நீ | யு | க்துலு | நடு | வது |
| ஸா ; ரீ | மா ; மா பா ; | தா | பா தா ; | பா மா | பா தா |
| ஸா ; ர | ஸா ; க்ஷ ஸ்ரீ ; | க்ரு | ஷ்ணு | ...... | ...... |
| ஸ்ா ; ஸ்ா ; | ஸ்ா ; ஸ்ா ஸ்ா ; | தா நீ | தா மா | கா ரீ | ஸா தா |
| சா ; லு | சா ; லு நீ ; | யு | க்துலு | நடு | வது |
| ஸா ; ரீ | மா ; மா பா ; | தா | பா தா ; | பா மா | பா ; |
| ஸா ; ர | ஸா ; க்ஷ ஸ்ரீ ; | க்ரு | ஷ்ணு ; | ...... | ... ; |

அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பா ; பா | தா ஸ்ா ஸ்ா-ஸா ஸ்ா | நீ க்ா | ரீ ஸ்ா | நீ தா ; | தா |
| சூ ; ல | த ரு ல-க ரு | தை | ன ம | மு கு ; | ம |
| தா பா ம்ா | பா தா ஸ்ா ஸ்ா ஸ்ா | ரீ ம்ா | க்ா ரீ | நீ தா ; | தா |
| சூ......ல | த ரு ல க ரு | தை | ந ம | மு கு ; | டி |
| ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா | நிதா தா ; | பா பா ; | பா | ;- | மா பா தா |
| ஸ-க மு ல | னுப விம் ; | ப வே ; | ஸ்ரீ | ;- | க்ருஷ்ண. |

(சாலு சாலு - 4-வது ஸங்கதி)

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பா ; பா | பா ; பா-தாபா | தா நீ | தா பா | கா ரீ | ஸா தா |
| த்யா ; க | ரா ; ஜ-நுது | டனி | ய தி | ப்ரே | மசே |
| ஸா ஸா ஸா ஸா | ஸா ரீ பா்மா | கா ; | ; ; | ரீ | ஸா ; ; |
| க ரு ணு லு | வ ச் ெதி | மி ; | ; ; | ...... | ; ; |
| பா ; பா | தா ஸ்ா ஸ்ா-ஸ்ா ; | ரீ க்ா | ரீ ஸ்ா | ஸ்ா நீ | தா தா |
| போ ; கி | ச ய ன-மா ; | மா | டலு | மீ | ரக |
| தா பாமா | பா தா ஸ்ா-ஸ்ா ; | ரீ ம்ா | க்ாரீ | ஸ்ா நீ | தா தா |
| போ கி | ச ய ன-மா ; | மா | டலு | மீ | ரக |
| ஸ்ா ; ஸ்ா | ஸ்ாநீ தா தா ; | பா பக | பா பக | ;- | பா பா தா |
| புத் ; தி | சா லி யௌ ; | து ஸு | மி ஸ்ரீ | ;- | க்ருஷ்ண |

(சாலு சாலு - 4-வது ஸங்கதி)

தென்னிந்தியப் பிரமுகர்கள்

மஹாமஹோபாத்யாய

# எஸ். வி. சுப்பராயாச்சார்

(1836—1918)

(கே. எஸ். ஆர்.)



## வியாகரணத்தை விஸ்தரித்தவர்

மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமுஷ்ணம் வியாகரண சுப்பராயாச்சார் பிறந்து சென்ற வருஷத்துடன் ஒரு நூற்றுண்டு முடிவாகிவிட்டது. சம்ஸ்கிருத உலகம் வியாகரண சுப்பராயச்சாரை நன்கு அறியும்; ஏனெனில், சம்ஸ்கிருதக் கலையின் வியாகரணப் பகுதியை எங்கும் வியாபிக்கும்படிப் பிரசித்தி செய்தவர் இப்பெரியார். இவருக்குப் பின்பு இவரிடம் வியாகரணப் பகுதியைக் கற்றுக்கொண்டு பல மாணவர்களும் தற்போது சிறப்புற்று விளங்குகின்றனர். பொதுவாகவே வியாகரண பாகம் மிகக் கடுமையானது; இப்பகுதியின் நுட்ப சூக்ஷமங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற உறுதியுள்ளவராகி, இவர் அதனை நன்கு அப்யஸித்து, அப்பகுதியின் அதிகாரியாக உலகெங்கும் கோஷிக்கும்படியாகப் புகழ் சம்பாதித்துக் கொண்டார். இவர் காலத்தில் வியாகரண பாடத்தில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்கள் வேறு இதரர்கள் கிடையாது என்றே கூறவேண்டும். ஆயினும் இவருக்குச் சமம் எனக் கூறும்படியாக அக்காலத்தில் சோபித்து வந்தவர் காலஞ்சென்ற வியாகரணம் ரங்காச்சாரியார் ஆவார்; இவ்விருவர்களும் ஒரே குருவை ஆஸ்ரயித்து ஆரம்பத்தில் படித்தவர்கள். இது நிற்க, இவ்வியாகரண சாஸ்திரத்தில் நிகரிலா ஞானத்தைச் சம்பாதித்துக்கொள்வதற்காக இவர் மேற்கொண்ட சிரமங்கள் மிக்கவள; அவை எல்லாம் அதிசயிக்கத்தக்கவை. இவர் அனுபவித்த இடையூறுகளையும் கஷ்டங்களையும் நாம் கேட்டாலே இடிவிழுந்தவர்கள் போல் பிரமித்துவிடுவோம்; வியாகரண சுப்பராயாச்சார்போன்ற உண்மையான வித்தியார்த்திகளை நாம் இக்காலத்தில் காண்பது துர்லபம் என்றே நிச்சயிக்கவேண்டும்; இவர் போன்றவர்கள் தங்களது வித்தியாபிவிருத்திக்காக எத்தகைய சிரமத்திற்கும் ஆளாக இசைந்தவர்கள்; சௌகர்யம் மிக்க வளர்ந்திருக்கும் இந்நாளில் தற்காலத்திய மாணாக்கர்கள் உசிதமான சிரமத்தையும் பதின்மடங்காக வர்ணித்துப் பாராட்டுகின்றனர். இப்பெரியாரது மஹோன்னதமான வாழ்க்கையானது இக்காலத்திய மாணாக்கர்களுக்கும், வித்தியார்த்திகளுக்கும் பலவிதங்களில் நற்புத்தியைப் புகட்டி, அவர்களது கடமைகளை அவர்களுக்குப் போதிப்பதாகும். தாம் எவ்வளவு ஆர்வத்துடன் வித்தியாபிவிருத்தியை நாடி வந்தனரோ, அவ்விதமே ஆர்வத்துடன் இவர் தம்மிடம் வித்தியாபிவிருத்தியை உத்தேசித்து அண்டுவோர்களுக்குப் பாடம் போதிப்பது வழக்கம். ஆசாரியருக்குரிய அருங்குணங்கள் இவரிடம் அமைந்திருந்தன வென்றால் போதும்.

## சிறந்த குடும்பம்

மஹாமஹோபாத்யாய ஸ்ரீமுஷ்ணம் வியாகரண சுப்பராயாச்சார் அவர்கள் 1836-ம் வருஷம் ஜூலை மாதத்தில் (துர்முகி வருஷம் ஆடி மாதம்) ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்திற்குச் சுமார் 25 மைல் தூரத்திலிருக்கும் ஸ்ரீமுஷ்ணம் என வழங்கும் திவ்வியப் பிரதேசத்தில் பிறந்தனர். இவர் ஜனித்த ஸ்தலமானது அநேகம் இதர பெரியார்களுக்கும் பிறப்பிடமாக விருந்துள்ளது. இவரது தகப்பனாரின் பெயர் வித்வான் நாராயணாச்சார் என்பதாகும்; இவருடைய தாயாரின் பெயர் அம்புஜம்மாள் என்பதாகும். இவர் தோன்றிய தினமானது அந்த க்ஷேத்திரத்தில் ஒரு மங்களகரமான தினமாகவே அமைந்திருந்ததாம்! தமது பெற்றோர்களுக்கு ஐந்து குமாரர்களுள் இவர் இரண்டாவதாகப் பிறந்தவர். இவருக்குச் சகோதரிகளும் இருந்தனர். இவருக்குத் தமது சகோதரிகளுடன் பழகுவதினால், அநேகம் உயர்ந்த குணங்கள் உண்டாயின வாம். தவிர இளம் பிராயத்திலிருந்தே இவரிடம் பல அரிய குணவிசேஷங்களும் காணப்பட்டன: தயை, தாக்ஷிண்யம், வைராக்கியம், வாக்சாதுர்யம் முதலிய குணாதிசயங்கள் இவரிடத்தில் சேர்ந்து ஆரம்பத்திலேயே இவரது பிற்காலப் புகழைச் சூசிப்பித்தன. தவிரவும் இவர் உதித்த குடும்பமும் சம்ஸ்கிருத கலாவல்லமை மிகுந்ததாகும்; ஆர்யாச்சார் என மிக்க பிரசித்திபெற்றவர் இக்குடும்பத்தில் இவருக்கு முன்பு தோன்றிய திவ்விய புருஷராவார். முதலிலிருந்தே புத்திகூர்மையுடன் இவர் சோபித்ததுபற்றி இவரது தகப்பனார் இவரை அன்புடன் பாவித்து வந்தார்.

## வினயத்துடன் வித்தை கற்று வாழ்வது

சிறு வயதிலேயே இவர் தமது ஜ்யேஷ்ட சகோதரரிடம் வித்யாப்பியாசம் செய்ய ஆரம்பித்தார்; அதிதீவிரமாக இவர் தமது வித்யாப்யஸனத்தில் ஈடுபடவே, வெகு சீக்கிரத்தில் இவர் விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலானார். இவரது பெற்றோர்களும் வித்தையை இவருக்கு உத்ஸாஹத்துடன் அளிக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர். பின்பு அத்யயனம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இவர் தாம் பிறந்து வளர்ந்த ஸ்ரீமுஷ்ணத்தை விட்டுப் பிரிந்து, திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். இவ்வூரில் இவர் ஐந்து வருஷ காலம் பூராவும் இருந்து ருக்வேத அத்யயனம் செய்தனர். இதே சமயத்தில் இவர் மன்னார்குடியில் வசித்து வந்த ஸ்ரீ கோபாலாச்சாரியார் என்ற ஸ்ரீவைஷ்ணவரிடம் வியாகரண சாஸ்திரத்தையும் கற்க வாரம்பித்தார். இந்த ஸ்ரீகோபாலாச்சாரியார் சம்ஸ்கிருத பாஷையில் ஆச்சரியமான பாண்டித்யத்தைப் பெற்று விளங்கியவர். அவரிடம் த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைப் பின்பற்றியவர்களும் சிஷ்யர்களாக விருந்துள்ளனர்; இம்மாதிரி மூன்று சித்தாந்தங்களையும் சேர்ந்து பிரபலர்களாக விளங்கிய சிஷ்யர்கள் வேறு ஒரு ஆசாரியாரிடமும் இருந்தது கிடையது. கோபாலாசாரியாரிடம், மஹாமஹோபாத்தியாய ராஜு சாஸ்திரிகள், பீமாச்சார், மன்னார்குடி வியாகரணம் ரங்காச்சாரியார், நீடாமங்கலம் அய்யாவாச்சார், சேரங்குளம் குப்பாச்சாரியார், ராமபத்ராச்சாரியார் முதலான பல பிரசித்தர்கள் சிஷ்யர்களாகவிருந்தவர்கள்.

த்வைத சித்தாந்தியான இவரும் கோபாலாச்சாரியாரிடம் சிஷ்யராக விளங்கியவர். ஸ்ரீ கோபாலாச்சாரியாரும் தமது சிஷ்யனின் ஸாமர்த்தியத்தை வெகு சீக்கிரத்தில் அறிந்துகொண்டவராகி, இவரைப் பின்வருமாறு ஆசீர்வதித்தார்: "நீ மஹா பண்டிதனாகி வியாகரணம் சுப்பராயாச்சார் என்று சாசுவதமான கீர்த்தியுடன் வெகு காலம் வாழ்வாயாக" குருவானவர் ஆசீர்வதித்தபடியே இவரும் பிற்காலத்தில் புகழ் எய்தினார். குருவானவர் தமது சிஷ்யரிடம் உண்மையான ப்ரீதியும் வாத்ஸல்யமும்கொண்டு மனமுவந்து ஆசீர்வதித்தார் என்பதில் என்ன சந்தேகம்? தவிரவும் இந்த நிகழ்ச்சியானது இவரது உத்கிருஷ்டமான குரு பக்தியையும் கோஷிப்பதாகின்றது. "வினயத்துடன் வித்தை கற்று வாழ்வது" இவர் போன்றவர்களின் பாக்கியமாகவிருந்தது.

## ஜ்வலிக்கும் அக்னி சுபத்தை சூசிப்பிக்கும்

இவ்வாறு வித்தை கற்று வரும் நாளில், இவரது பதினாலுவது பிராயத்தில் இவருக்கு விவாகம் நடந்தது. இது பால்ய விவாகமானபோதிலும் இவரது படிப்பிற்கு இது விரோதம் புரியவில்லை. தமக்கு விவாகமான சொற்ப காலத்திற்கெல்லாம் இவர் தமது வித்தியாபிவிருத்தியைக் கருதி வடதேசம் போகத் தீர்மானித்துவிட்டார். குறிப்பிக்கப்பட்ட தினத்தன்று இவர் தமது பிரயாணத்தை ஆரம்பித்தபோது, ஓர் சுமங்கிலி நெருப்பைக் கையில் எடுத்துக்கொண்டு இவர் எதிரே வந்தனளாம். இது சகுனத்தடை என்று கருதியபோது அந்த ஸ்திரீ இவரைப் பார்த்து, "அப்பா, குழந்தாய், நீ சந்தேகப்படாதே. இதுதான் நல்ல சகுனம். ஜ்வலிக்கும் அக்னி சுபத்தை சூசிப்பிக்கும், புகையும் நெருப்புதான் அசுபத்தைக் கொணரும். ஆகையால் நீ அதைரியப்படாதே, தைரியமாகப் போய்வா", என்று சொன்னாள். இந்த ஸ்திரீ இவருக்கு நெருங்கிய பந்துவாவார். இவ்வார்த்தைகளைக் கேட்டு இவரும் மனத்ருப்தியடைந்தவராகி, மனக்கிலேசம் சிறிதுமின்றித் தமது வழியே புறப்பட்டுச் சென்றார். நம்பிப் புறப்பட்ட இவருக்கு இப்பிரயாணத்தின் மூலம் அதிகப் பெருமை கிட்டியது.

## வித்தை கற்பதில் உண்டான சிரமங்கள்

அந்த காலத்தில் பிரயாண சௌகர்யங்கள் மிகக்குறைவாகவிருந்தன. ஆகையினால், இவர் நடந்து பண்டரீபுரத்திற்குச் சென்றார்; வழியில் தமது பசியைத் தணித்துக்கொள்ள இவரே சமையல் செய்து கொள்வார். சிரமங்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இவர் அந்நகரை வந்தடைந்து, அங்கிருந்த பண்டிதர்களுக்குத் தமது பராவீண்யத்தை எடுத்துக் காட்டினார்; இதனால் அவர்கள் பரமப்ரீதியடைந்தனர். இவர் அங்கிருந்த ஸுர புரம் ஹயக்ரீவாசாரியரிடத்திலும் பண்டரீபுரம் கிருஷ்ணாச்சாரிடத்திலும் வியாகரண சாஸ்திரக் கிரந்தங்களை நன்கு கற்றுக்கொண்டனர்; உடனே பிரசித்திபெற்ற பாண்டித்யத்தையுடையவராகிய இவர், கோல்லாபுரம் போய் அங்கு தர்க்க சாஸ்திரத்தை ஸ்வீகரித்தார். இக்காலங்களில் இவர் அனுபவித்த இடையூறுகள் எண்ணிறந்தன; இராக்காலங்களில் தமது பாடங்களைப் படித்துச் சிந்தனை புரியத்தக்க அனுகூலங்கள் இல்லாமையால், இவர் முனிசிபாலிடி தீபங்களின் கீழே நின்று வாசித்து வருவார்; சில சமயங்களில் கோவிலுக்குச் சென்று அங்கிருக்கும் விளக்குகளின் பிரகாசத்திலும் படிப்பார். உண்மை வித்தியார்த்தியான இவர், இத்தகைய சிரமங்களைப் பொருட்படுத்தாமல், ஊக்கத்துடனும் உத்ஸாஹத்துடனும் படித்து வந்தார். சாதாரணமாக வித்தையை ஆஸ்ரயிப்பவர்கள், சுகத்தையும் நித்திரையையும் பெரிதாகக் கருதக்கூடாதன்றோ!

## தஞ்சை மகாராஜாக்களுக்கு ஆஸ்தான பண்டிதர்

இவ்வாறு வித்தையைச் சம்பாதித்துக்கொண்டு, தமது 25-வது வயதில் இவர் தமதூருக்குக் கீர்த்தியுடன் திரும்பினார்; உடனே தமது ஸ்ரீமத்வ சித்தாந்த விஷயங்களைத் தமது உறவினரான ராமண்ணாச்சாரிடம் தெரிந்துகொண்டார். அவரிடம் அப்போது இவர் பூர்வமீமாம்ஸையையும் அப்பியஸித்தார். பின்பு இவர் தமது காலத்தை மேலும் மேலும் வித்யாதனத்தைச் சம்பாதிப்பதிலும் அவற்றைச் சிஷ்யர்களுக்கு விநியோகம் செய்வதிலுமேயே கழித்து வந்தார். இவர் ஒருவர்கீழும் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தமது வித்யாமஹிமையினால் ஏற்பட்ட வியாகரணம் சுப்பராயாச்சார் என்ற பெயருடன் இவர் தம்மையண்டி வரும் சிஷ்யர்களுக்கு அப்பகுதியைக் கற்றுக் கொடுத்து அதை மிக்க அபிவிருத்தி செய்தார். இவர் வெகுகாலம் தஞ்சை மஹாராஜாக்களின் ஆஸ்தான பண்டிதராகக் கௌரவத்துடன் இருந்து வந்தார். ஆகையினால், இவர் தமது காலத்தில் பெரும் பாகத்தைத் தஞ்சைமாநகருக்கடுத்த திருவையாறு க்ஷேத்திரத்தில் கழித்தனர்.

## வாக்யார்த்தம்

இவர் பல சதஸ்களில் பரீக்ஷகராகவும் இருந்தார். தஞ்சாவூர், திருச்சானூர், மைசூர் முதலான பிரதேசங்களில் நடைபெற்ற பண்டித பரீக்ஷைகளில் இவர் பரீக்ஷகராக அங்கீகரிக்கப்பட்டவர். வாதத்திலும் இவருக்கு விசேஷத் திறமையுண்டு; இவரைப் பங்கப்படுத்த வேண்டுமென்று அக்காலத்தில் அநேகர் வீணாக முயற்சித்ததுண்டு. இவரது சம்ஸ்கிருத பதப் பிரயோகங்களைக் கண்டே பலரும் திகைத்துவிடுவார்கள். ஒரு சமயம் தஞ்சாவூரில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வாதத்தில் இவரைத் தோற்கடிக்க யத்தனித்தார். இதற்காக அவ்வூர் பிரபுக்களில் ஒருவரான பெரியண்ணா இதற்கு ஏற்பாடுகள் செய்தார். தவிரவும் அந்நாளில் சிவாஜி "கிரௌன் அப் இந்தியா" என்ற பிருதுக்கள் மூலம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் அலங்கரிக்கப் பட்டவரும், மேன்மை தங்கிய சகாராம் சாகேபின் பத்னியுமான காலஞ்சென்ற சிவாஜி மஹாராஜாவின் புத்திரியார், பெரியண்ணா பிரபுவின் மாளிகையில் பிரதி வருஷமும் சம்ஸ்கிருதப் பண்டிதர்களின் சபையைக் கூட்டி, பரீக்ஷைகள், வாதங்கள் முதலியவற்றை நிகழ்த்தி, சம்மானம் வழங்குவது வழக்கம். இவருக்கும் மேற்குறிப்பிட்ட ஸ்ரீவைஷ்ணவருக்கும் வாதமானது சிவாஜி மஹாராஜா அரண்மனையில் நடைபெற்றது; அங்கு பிரமுகர்கள் கூடியிருந்தனர். இவரது வாக்கியார்த்த விசாரம் ஆரம்பமாகியது. எதிர்வாதப் பூர்வ பக்ஷமும் நடைபெற்றது. இறுதியில் இவருக்கே ஜயம் கிடைத்தது. அசூயையால் தூண்டப்பட்ட இவரது எதிரி, அவமானமடைந்தார். உயர்ந்த சன்மானங்களுடன் இவர் கிருஹத்திற்கு அனுப்பப்பட்டார். அந்தக்காலத்தில் இவரை வாதத்தில்ஜயித்தவர்களே கிடையாதாம். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நடக்கும் வித்வத் சபைக்கும் தஞ்சை அரண்மனையில் ஸ்கந்த ஷஷ்டியின் போது நடக்கும் வித்வத் ஸம்மேளனத்திற்கும், ஸ்ரீரங்கம் கொடியாலம் வாசுதேவய்யங்காரின் சொந்த ஊராகிய கொடியாலத்தில் பிரதி வருஷம் மாசி மாதத்தில் நடைபெறும் பண்டித கோஷ்டிக்கும் இவர் தவறாமல் அழைக்கப்பட்டுச் சென்று வருவார். மைசூர் முதலிய சமஸ்தானங்களுக்கும் யாத்திரை செய்து, அநேக பிரபுக்களிடம் சம்மானம் வாங்கி, அதையே மூலதனமாகச் சேகரித்து, திருவையாறுக்கடுத்த புது அக்கிரஹாரத்தில் ஒரு சிறிய கிரஹத்தை வாங்கி, அதில் சுகமாகக் காலத்தைக் கழித்து வந்தார். பண்டித சதஸ் எங்கு நடந்தாலும், ஆஹ்வான பத்திரிகை கிடைத்

(29-ம் பக்கம் பார்க்க)


# அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

## டில்பஹார் ஸோப்பு



(ரிஜிஸ்டர்ட்)
மூன்று கட்டிகளின் விலை
ஒரு ரூபாய் தான்
(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்த சுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும் அழகை விருத்திசெய்யும்.



## உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆம்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2.**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

# கண்ணோட்டம்    பிரமுகர்கள்



1937-38ம் வருஷத்திற்கு ரோடரி சங்கங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸர் பிரோஸ் சேத்னா.



பம்பாய் பிரபல நாட்டியக்காரியான ஸ்ரீமதி ஹதிசிங். இவர் கவி ரவீந்திரரின் உறவினரான ஸ்ரீமான் ஸம்யேந்திர நாத் தாகூரை விவாகம் செய்துகொள்ளப் போகிறார்.



பின்லண்ட் தேசியத் தலைவர் பாரன் மானர்ஹின் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார்.



கோயமுத்தூர் ஜில்லா போர்டு அங்கத்தினராக நியமனம் பெற்றிருக்கும் ஸ்ரீமதி ருக்மணி அம்மாள்.



தென்காசிக்கருகிலுள்ள எளஞ்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீகள் சங்கத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸஸ் ஐ. எஸ். குத்தாலலிங்கம் பெத்தம்மாள்.



கணித ஆராய்ச்சிக்காக கேம்பிரிட்ஜ் சர்வ கலா சாலையால் டாக்டர்பட்டம் அளிக்கப்பட்டுள்ள ஸ்ரீமான் வி ராமசாமி. இவர் ஆந்திரா சர்வகலா சாலையில் உத்தியோகம் வகித்து வருகிறார்.



ஐக்கிய மாகாண தொழிற்சாலைகள் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸஸ் அக்னெஸ் ஷா. இந்த உத்தியோகம் வகிக்கும் முதல் இந்திய கிறிஸ்தவ இவர்தான்.



மன்னர் மகுடாபிஷேகத்திற்கு திருவாங்கூரின் பிரதிநிதியாகச் செல்ல நியமிக்கப்பட்டிருக்கும் கார்டன் கே. வி சங்குண்ணி நாயர்.

# மதிப்புரை

—:[o]:—

## ஆங்கில ஸ்வபோதினி

(ஸ்ரீமான் வி. என். ரங்கசாமி அய்யங்கார் எழுதியது சென்னை, பிராட்வேயிலுள்ள தாருல் இஸ்லாம் கம்பெனியார் வெளியிட்டது. விலை ரூ. 1.)

ஆங்கில பாஷா ஞானம் இக்காலத்தில் மிகவும் அவசியமானது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. அதன் உபயோகத்தைப்பற்றியும் இப்பொழுது விரிவாகக் கூறவேண்டியதில்லை. ஆயினும் இப்பாஷை தெரியாத பலர் இன்னும் இருக்கின்றனர் என்பது பலர் அறிந்ததே. அத்தகையோர் சுலபமாகத் தாமாகவே இப் பாஷையைக் கற்றுக்கொள்ள இப்புஸ்தகத்தினால் வசதி யேற்படும். இந்தப் புஸ்தகத்தின் சில விசேஷ அம்சங்கள் படித்தறிபவர்களுக்கு ஏற்படும் சாதாரண சிரமத்தை நீக்க வல்லதாகவிருக்கிறது. புஸ்தகத்தில் சம்பாஷணைப் பகுதி, கதைப் பகுதி, தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தலும் சாதாரணமாக வழங்கும் கேள்விகளும் அடங்கிய பகுதியென மூன்று பாகங்களிருக்கின்றன. இந்த ஒவ்வொரு பகுதியிலும் வாசகர்கள் பாஷையை எளிதில் அறியத்தக்க சூக்ஷ்மமான விஷயங்கள் புகுத்தப்பட்டு விளக்கிக் காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. மேலும் இலக்கண விதிகளையொட்டியே இப்புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

## கலைமகள்

இதன் தை மாத இதழ் வரப்பெற்றோம். சங்க நூல்களினால் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் இருந்த புலவர் வரலாறுகளையும், அவர்களை ஆதரித்துப் போற்றிய செல்வர் வரலாறுகளையும் அக்காலத் தமிழ் நாட்டினரது நாகரீகத்தையும் நாம் அறிகிறோம். அத்தகைய செல்வர்களுள் கண்டீரக்கோப் பெருநள்ளி என்பவன் ஒருவன். அவனைப்பற்றிய சில ரஸமான விஷயங்களை "அவன் யார்?" என்ற தலைப்பின் கீழ் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் உதவியிருக்கிறார். இப்பொழுது லால்குடி எனப்படுவதும் முன்பு திருத்தவத்துறை என வழங்கப்பட்டதுமான ஊரைப்பற்றிய வியாஸமொன்றை ஸ்ரீமான் மு. இராகவையங்கார் எழுதியிருக்கிறார். விஜய நகர ஓவியங்கள், முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கவித்திறம், தமிழரும் யவனரும், பண்டைத் தமிழ் எழுத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சி முதலிய கட்டுரைகளையும் சில பிரமுகர்கள் உதவியிருக்கின்றனர். பல கதைகளும் ஒரு நாடகமும் இந்த மலரை அலங்கரிக்கின்றன.

* * * *

## ஸ்ரீ வேதாந்த தீபிகை

இதன் ஜனவரிமாத இதழ் வரப் பெற்றோம். இதில் சில அரிய வியாசங்கள் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீ ஆண்டாள் அல்லது சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றதொரு வியாஸத்தை ஸ்ரீமான் ஸ்ரீநிவாசராகவன் எழுதியிருக்கிறார். இது படிப்பதற்கு மிக ரஸமாயிருக்கிறது. வைத்திய ரத்ன எம். துரைசாமி அய்யங்கார் சௌசம் அல்லது பாரிசுத்யம் என்ற விஷயமாகத் தொடர்ந்து எழுதியிருக்கிறார். ஸ்ரீ வரதராஜ பஞ்சாஸத் 19, 20-வது சுலோகங்களின் வியாக்கியானங்கள் தொடர்ச்சியாக வெளி வந்திருக்கின்றன. வழக்கம்போல் விவாதபாகம் மிக ருசிகரமாக விருக்கிறது.

* *

## கிராமபோன் சங்கீதம்

———

### பிராட்காஸ்ட் புது வெளியீடு

———

பிராட்காஸ்ட் ரிகார்டுகளின் புதிய வெளியீடு வரப்பெற்றோம். இந்த வெளியீட்டில் இதுவரையில் கிராமபோன் ரிகார்டுகளில் தோன்றாது சங்கீத மேடைகளில் மட்டும் கலாரஸிகர்கள் கேட்டு ஆனந்தித்திருக்கும் சங்கீத வித்வான்கள் ரிகார்டுகள் கொடுத்திருக்கின்றனர்.

வித்வான் மன்னார்குடி ராஜகோபால்பிள்ளை சக்ரவாக ராகத்தில் "எடுலப்ரோதுவோ" என்ற தியாகராஜ கீர்த்தனத்தைப் பாடியிருக்கிறார். ஆரம்பத்தில் ராக ஆலாபனை வெகு இனிமையாகவிருக்கிறது. இவரது இனிய சாரீரம் இந்த ரிகார்டு மூலம் நன்கு வெளிப்படுகிறது. சிட்டா ஸ்வரத்தையும் பாடியிருக்கிறார். பக்கவாத்தியமும் இவருக்கு நன்கு அமைந்திருக்கிறது. ஒவ்வொருவரும் கேட்டு ஆனந்திக்கக் கூடிய ரிகார்டுகளில் இதுவொன்றாகும்.

தியாக பிரஹ்மத்தின் சிஷ்ய பரம்பரையைச் சார்ந்த வித்வான் மஞ்சக்குடி ராமசந்திர பாகவதர் ஒரு பக்கத்தில் முகாரியில் "எந்தநினே வர்ணிந்துநு" என்ற பாட்டையும் மற்றொரு பக்கத்தில் சுரட்டியில் "ராமசந்திர நீதய" என்ற பாட்டையும் பாடியிருக்கிறார். பின் கூறப்பட்டது மிகச்சிலாக்கியமாகவிருக்கிறது. இவரது சாரீரமும் ஸங்கதிகளும் அவசியம் கேட்கத்தக்கது.

தோடி ராக ஆலாபனமும் சிட்டா ஸ்வரமும் குன்னக்குடி வெங்கடராமய்யர் கொடுத்துள்ள ரிகார்டில் அபூர்வமாகவிருக்கிறது. "முந்துராவண" என்ற பாட்டை இருபாகங்களாகப் பாடியிருக்கிறார். அமிருதவர்ஷம் போன்ற தோடியின் மஹிமையை விஸ்தரித்துக் கூறவேண்டியதில்லை.

பங்களூர் கிருஷ்ண மூர்த்திராவ் பியாக் ராகத்தில் "கோபியபாக்ய" என்ற பாட்டையும் பாகேஸ்வரி ராகத்தில் "ஸம்ஸார" என்ற பாட்டையும் பாடியிருக்கிறார். இவர் ஆந்திர நாடகத் தோரணையைப் பின்பற்றியதாகக் காணப்படுகிறது. சமீபகாலத்தில் பேசும் படங்களிலும் தெலுங்கு நாடகங்களிலும் இந்த மெட்டுகளைக் கேட்டவர்கள் இந்த ரிகார்டு சங்கீதத்தினால் ஆனந்தமடையாதிருக்கமாட்டார்கள்.

லோஸலகிருஷ்ண தாஸ் திருப்பதி வெங்கடேசப் பெருமாளைப்பற்றியும் கிருஷ்ணனைப் பற்றியும் இரு ஸ்துதிகளைப் பஜனையாகச் செய்திருக்கிறார். இவற்றை இவர் மிக உருக்கமாகப் பாடியிருக்கிறார். பக்கவாத்தியங்கள் நன்கு இசைந்திருக்கின்றன. இதனால் பஜனை நன்றாகச் சோபிக்கிறது.


# ரூ. 1000 இனாம்

உண்மை! உண்மை!!

உலகத்தில் வெளிவந்துள்ள

மாணவர்களுக்குரிய கதைகள்; மாணவிகளுக்குரிய கதைகள்; ஏழைகளுக்குரிய கதைகள்; பணக்காரர்களுக்குரிய கதைகள்; பாட்டன், பாட்டிகள் விரும்பும் கதைகள்; குமாரர்கள் குமாரிகள் கொண்டாடும் கதைகள்; ஆண்கள் படித்துத் துடிக்கும் கதைகள்; பெண்மணிகள் படிக்கப் பறக்கும் கதைகள்; ஆணழகன் கதைகள்; பெண்ணணங்குக் கதைகள்; முத்தமிடும் கதைகள்; மெத்த மயக்கும் கதைகள்; சரிநிகரில்லாச் சல்லாபக்கதைகள்; சரச ரசிகச் சதிபதிக் கதைகள்; மற்ற மறைக் கதைகள் எல்லாம் கொக்கோகக் கதைகள்; உலகமே இந்நூலில் காணலாம்!

கோடி கொடுப்பினும், தேடித் திரியினும், நாடி வாராதவை!

அசல் அரபியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள அற்புதமான நூல் இப்போது தமிழில் வெளிவந்துவிட்டது!!

அல்புலைலா வ லைலா

என்னும்

## அரபுநாட்டுக் கதைகள்

'கொக்கோக' நூல் பல பல புராணங்களிலுமுள்ள 'திருவிளையாடல்கள்' 'பஞ்ச தந்திரங்கள்' யாவற்றையும் தோற்கடிக்கத்தக்கது அந்தரங்க அசல் அரபி நூலின் மொழிபெயர்ப்பு!

பிறந்த க்ஷணமுதல் இறந்து படும் வரையில் உலகில் இயல்பான சிற்றின்பப பேரின்ப ரகஸியக் களஞ்சியமே இந்நூலின் கதைகள்!!

எந்நூலிலிலலாத விஷயமும் இந்நூலில் உண்டு; ஆனால் இந்நூலிலுள்ள விஷயங்களை எந்நூலிலுமே காணமுடியாது!!!

தன் மரணத்தைத் தடுக்க, மந்திரி குமாரி அரசனை 1001 இரவுகளிலும் ரதிகேளிக்கைச் செய்து 400-க்கு மேற்பட்ட அந்தப்புர அதற்கப்புறமான அற்புத அதிசயக் கதைகளைச் சொல்லி மதி மயக்கிய கதைகள்!!!

அரசன் மயங்கினானயின் அனைவரும் மயங்குவது திண்ணம்! திண்ணம்!!

320 பக்கங்களுடனும், நூற்றுக்கணக்கான படங்களுடனும், கண்ணைப்பறிக்கும் அச்சுடன், அழகாக வெளிவந்துள்ள இப்படிப்பட்ட இந்நூலின் முதற்பாகம்

**விலை ரூ 1-4-0 தான்.,** வி பி பி. செலவு வேறு.

இக்கதைகளில் ஒன்றேனும் உங்களுக்குத் திருப்தியளிக்காவிடில் உங்கள் பணம் வாபஸ் கொடுக்கப்படும்.

இதுபோன்ற வேறொரு நூலை யாராவது தமிழில் கண்டிருப்பதாக ரூபித்தாலும் சரி, கொண்டுவந்து கொடுத்தாலும் சரி, ரூ. 1000 இனாமாகக் கொடுக்கப்படும்.

ஒரே வாரத்தில் ஓராயிரம் (1000) காபிகள் பறந்துவிட்டன! முந்துங்கள! முந்துங்கள்!!

"தாருல் இஸ்லாம்" புத்தகசாலை,
158-B, பிராட்வே, தபாற்பெட்டி நெ. 15, மதராஸ்.

எல்லா ஹிக்கின்பாதம் ரயில்வே புக்ஸ்டால்களிலும், எல்லா உள்நாடு, வெளிநாடு, பாமா, ஸிலோன் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.



பண்டித ஜவஹர்லால் நேரு தேர்தல் பிரசாரம் செய்ய அமிருதஸரஸுக்கு ஆகாயவிமானத்தில் சென்றார். ஓர் பெரிய ஜனத்திரள் விமானத்தைச் சுற்றிக்கொண்டதால், ஜவஹர் விமானத்திலிருந்து இறங்கிவருவதே மிகவும் கஷ்டமாகிவிட்டது.

மற்ற பக்கங்களில்


விடியுமுன் 2
ஸ்ரீ நாதக்கொத்து 3
ராதா (தொடர்கதை) 4
பிச்சுவின் பால்ய லீலை 7
ஸங்கீதப்பகுதி 8
தென்னிந்தியப் பிரமுகர்கள் 11
கண்ணோட்டம் - பிரமுகர்கள் 13
மதிப்புரை 14
இந்தியவர்த்தமானம் 15
எகிப்தியரின் பண்டைப் பெருமை (சரித்திரப் பகுதி) 17
கொற்றவனை மயக்கிய கள்ளப் பெண் (அதிசய உண்மைக் கதைகள்) 23
பிரபஞ்ச வர்த்தமானம் 25
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி 27
மூன்று கப்பங்கள் (சிறுவர் பகுதி) 30
நவநாகரீகம் 31
பாகவதரின் மீசை (ஹாஸ்யப்பகுதி) 33
உலகப் போக்கு 38
தையல் வேலை 39
பெரிய மனிதர்கள் சொல்லுவது 40


# இந்திய வர்த்தமானம்

### மதக்கூட்டத்தில் கத்தி வீச்சு

பாட்னா நகரிலுள்ள ஹரிமந்திரத்தில் குருகோவிந்தசிங் பிறந்த தினத்தை முன்னிட்டு சீக்கிய மதக்கூட்டம் நடைபெற்றது. அதில் சில சீக்கியர்கள் திடீரெனத் தடிகளுடனும் கத்திகளுடனும் வந்து அங்கு கூடியிருந்த யாத்ரீகர்களைக் கண்டபடி தாக்கிப் பலருக்குக் காயமுண்டாக்கினர். கூட்டத்தில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டது. தாக்கியவர்களின் நோக்கம் தெரியவில்லை.

* * * *

### வக்கீல்களின் விருத்திக்கு வழி

திருநெல்வேலி வக்கீல்களில் பெரும்பான்மையோரின் நிலைமை பொருளாதார அம்சத்தில், கவலைக்கிடமாயிருப்பதால் அதை அபிவிருத்தி செய்ய அவ்வூர் வக்கீல்கள் ஒரு புது யோசனையை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு:—வக்கீல்கள் தனித்தனியாகத் தங்கள் தொழிலை நடத்துவதைவிடக் கூட்டாய் நடத்துவது உசிதமாகும். மொத்தமுள்ள வக்கீல்கள் தங்களுக்குள் 10 அல்லது 12 பேருக்குமேல் போகாமல் பிரிவுகளாக அமைத்துக்கொண்டு தொழில் நடத்தலாம். மொத்த வருமானத்தை முன் ஒப்புக்கொள்ளும் ஒரு விகிதாசாரப்படி பிரித்துக் கொள்ளலாம்.

இதைப் பரிசீலனை செய்து நடைமுறையில் அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தைப் பற்றி ஒரு மாதத்திற்குள் ரிபோர்ட்டு செய்ய வக்கீல்கள் சங்கம் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது.

### தேர்தல் சலவாத்தினால் ஆயிரம் மாணவர்கள் வேலை நிறுத்தம்

அமிருதஸரஸில் காங்கிரஸ் அபேக்ஷகருக்கெதிராக நிற்கும் ஸர்தார் ஸந்தோக் சிங்கைச் சேர்ந்தவர்கள் கால்ஸா கலாசாலையில் படிக்கும் ஒரு மாணவனை அடித்துத் தாக்கியது காரணமாக மேற்படி கலாசாலை மாணவர்களில் ஆயிரம் பேர் வேலை நிறுத்தம் செய்து தங்கள் வகுப்புகளுக்குப் போகவில்லை.

* * * *

### டில்லியில் போலீஸ் சோதனை

சட்ட விரோதமான துண்டுப் பிரசுரங்களையும் பறிமுதல் செய்யப்பட்ட புஸ்தகங்களையும் கண்டுபிடிக்க வேண்டி டில்லி போலீஸார் சென்ற 20-ந் தேதி பலவிடங்களில் சோதனை நடத்தினர். பல அபேதவாதிகளின் வீடுகளைச் சோதனையிட்டனர். ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போராடுவோர் வலுவடைகின்றனரென்ற தலைப்புடன் கூடிய ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கண்டுபிடிக்க வேண்டி இந்தச் சோதனை நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சில புஸ்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன.

* * * *

### அந்தமான் காடுகளில் டிராம்

அந்தமான் காடுகளில் டிராம் லயன்கள் போடுவது, பம்பாய் ஒலிபரப்பும் ஸ்டேஷனில் புதிய காரியாலயமும் ஸ்டுடியோவும் கட்டுவது, சிட்டகாங்கில் புதிதாகச் சுங்கவரிக் காரியாலயம் கட்டுவது ஆகிய திட்டங்களுக்கு இந்தியா சட்டசபை வரவு செலவுக் கமிட்டிக் கூட்டத்தில் செலவினங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தமானில் கடலோரத்திற்குக் காடுகளிலிருந்து மரம் கொண்டுவர டிராம் லயன்கள் போட வேண்டியிருக்கிறது.

* * * *


## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா



## பற்களின் இயற்கை அழகைப் பாதுகாருங்கள்

மலைக்க வேண்டாம்; ஒன்றும் பிரமாதமில்லை; பற்களை அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பது நீங்கள் எண்ணுவதுபோல அவ்வளவு சிரமமானதல்ல சுத்தமாக வைத்திருந்தால் போதும். சுத்தம்தான் அழகு. அழகுதான் ஆரோக்கியம். எதையோ உபயோகித்துப் பற்களைச் சுத்தி செய்வதில் பயனில்லை. "நீம் டூத் பேஸ்ட்" ஒன்றுதான் உண்மையில் சுத்தி செய்வது வேப்பஞ் சத்து இதில் தான் நிறைந்திருக்கிறது; மற்ற சுத்திகரிப்புச் சத்துக்களுமிருக்கின்றன. நீங்கள் பிரஷ் செய்யும்பொழுதே இந்தச் சத்துக்கள் நுரையாகி உங்கள் பல் எனாமலுக்குப் பிரகாசமளித்து பல்லிடுக்குகளில் இருக்கக் கூடிய கிருமிகளையும் அழிக்கும்

உங்கள் பற்கள் அழகாகவும், ஈறுகள் கெட்டியாகவும் இருக்க வேண்டுமானால் உடனே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்க ஆரம்பியுங்கள்.

'Neem' TOOTH-PASTE

படமர் வேண்டுமாயின் மார்ச்சேப்ரில் நீம் டூத்பேஸ்டர் உபயோகியுங்கள்

கல்கத்தா கெமிகல்





லாகூரில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பண்டித ஜவஹர்லால்நேரு பேசினார்.

### ஜனாப் அஸப் ஆலியின் வெளியேற்றம்

சென்ற 21-ந்தேதி இந்தியா சட்ட சபை வரவு செலவு கமிட்டிக் கூட்டம் ஸர் ஜேம்ஸ் கிரிக் தலைமையில் நடைபெற்றது. வரவு செலவுக் கமிட்டியின் வேலைபற்றிய அறிக்கையைக் குறித்து ஆலோசனை செய்வதைப் பல அங்கத்தினர் வராத காரணத்தினால் ஒத்தி வைக்க வேண்டுமென்று ஜனாப் அஸப்ஆலி கோரினார். அதற்கு ஸர் ஜேம்ஸ் கிரிக் இணங்க மறுக்கவே, அதைக் கண்டிப்பதற்கடையாளமாக, ஜனாப் அஸப் ஆலி கமிட்டிக் கூட்டத்தைவிட்டு வெளியேறினார்.

* * * *

### வாக்காளரை முரசுகொட்டி அழைக்க ஏற்பாடு

பண்டித் ஜவஹர்லால் நேரு பின் கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

ஐக்கிய மாகாணத்திலுள்ள பல ஜில்லாக்களில் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் வாக்காளரை தேர்தல் தினத்தன்று வாக்களிக்குமிடத்திற்குப் போகுமாறு தூண்ட சில ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக எனக்குத் தெரிகிறது.

முக்கியமாக கிராமங்களில் தேர்தல் தினத்தன்று அதிகாலையில் குறித்ததொருநேரத்தில் முரசுகொட்டி வாக்காளரை அழைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிறகு அவர்கள் தேசீயக் கொடிகளுடன், தேசீயப்பாடல்களைப் பாடிக்கொண்டு போலிங் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டுமென்றும், அங்கு வாக்களித்துவிட்டு ஒழுங்காக வீட்டிற்குத்திரும்பி வரவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஐக்கிய மாகாணத்திலுள்ள இதர ஜில்லாக்களிலும் இதர மாகாணங்களிலும் இம்மாதிரியான ஏற்பாட்டைச் செய்யும்படி நான் சிபார்சு செய்கிறேன். கால் நடையாக போலிங் ஸ்டேஷனுக்குப் போகவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். படித்த வாலிபரும் மாணவரும் மற்றவரும் தேர்தல் நடக்குமிடத்தில் காங்கிரஸுக்கு உதவ முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

* * * *

### சுயேச்சைப் பிரதிக்ஞை தடை

சுயேச்சை தினக்கொண்டாட்டத்தின்போது சுயேச்சைப் பிரதிக்ஞையை வெளியிடக்கூடாதென்று சென்னை மாகாணமுள்படப் பல மாகாணங்கள் தடையேற்படுத்திவிட்டன. இது சம்பந்தமாகக் காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால்நேரு ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது:—சென்ற ஏழு வருஷங்களாகப் பல தடவைகளில் இப்பிரதிக்ஞை வெளியிடப்பட்டு வந்தும், பலவிடங்களிலும் உபயோகிக்கப்பட்டுவந்தும் இது இவ்விதம் தடுக்கப்படுவது நான் அறிந்தவரையில் இதுதான் முதல் தடவையாகும். எங்கும் காங்கிரஸ் பால் பொது ஜனங்கள் காட்டிவரும் மகத்தான உற்சாகம் கவர்ன்மெண்டுக்குக் கலக்கத்தையுண்டு பண்ணியிருக்கிறதெனத் தெரிகிறது. இப்பொழுது இத்தகைய உத்திரவுகளை மீறுவது நமது கொள்கையுமல்ல; விருப்பமுமல்ல. ஆகவே தடையுள்ள இடங்களில் இந்தக் குறிப்பிட்ட பிரதிக்ஞை அல்லது வாசக முறையை உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல. ஆனால் பழைய பிரதிக்ஞையை உறுதி செய்து சுருக்கமாக ஒரு பிரதிக்ஞையைச் செய்துகொள்ளவேண்டும்.

* * * *

### வாரமிருமுறை தாயைக்காண அனுமதி

கல்கத்தா வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரியிலிருக்கும் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸை அதிகாரிகள் வார மிருமுறை மாலையில் இரண்டுமணி நேரம் தாயைக்கண்டுபேச அனுமதி கொடுத்திருக்கின்றனர்! அவர் தமது வீட்டிற்கு ஸ்பெஷல் பிராஞ்சு போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவருடன் மோட்டாரில் போகவேண்டுமென அந்த உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது.

* * * *

### ஹரிஜனங்களை அனுமதிக்காத கோயில்கள்

சென்ற 23-ந் தேதி பின் கண்ட செய்தி அத்திங்கல் (திருவாங்கூர்) என்னுமிடத்திலிருந்து கிடைத்தது:—

அவர்ண ஹிந்துக்களை அனுமதிக்காத அத்திங்கல்கோவில்கள் சிலவற்றிற்கு இன்று மகாராஜா பூஜைக்காகச் செல்லவில்லை. வருஷாந்த 'அரித்து வாழ்ச்ச' பூஜை இன்று நடைபெற்றது. வழக்கமாக அத்திங்கலிலுள்ள எல்லாக் கோவில்களிலும் இன்று மகாராஜா பூஜைக்கு வருவதுண்டு. ஸீனியர் மகாராணிக்குச் சொந்தமான கோயில்களுக்கும் அவர் செல்லுவதுண்டு. ஆனால், இவ்வருஷத்தில் ஆலயப் பிரவேச ஸ்ரீமுகத்தைப் பின்பற்றி நடக்கும் ஆலயங்களுக்கே தாம் செல்லுவதென மகாராஜா முடிவு செய்தார். ஆலயப் பிரவேச ஸ்ரீமுகத்தின் அடிப்படையான கொள்கைகளைப் பூர்ணமாக நிறைவேற்றி வைக்க மகாராஜா உறுதி கொண்டிருக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

அரித்து வாழ்ச்ச உற்சவமென்பது மிக அழகானதாகும். இதில் திருவாங்கூர் ராஜகுடும்பத்தின் குல தெய்வத்திற்கு அன்னாபிஷேகம் செய்யப்படுகிறது. திருவாங்கூர் ராஜகுடும்பத்திற்கும் அத்திங்கல் என்ற ஊருக்கும் விசேஷச் சம்பந்தமுண்டு. முன்காலத்தில் அத்திங்கல் மகாராணிகள் அத்திங்கலில் ஆட்சி புரிந்து வந்தனர். பின்னர் அத்திங்கல் திருவாங்கூரின் ஒரு பாகமாக ஆனபொழுது திருவாங்கூர் ராஜகுடும்பத்திற்கு அத்திங்கலிலிருந்து சுவீகாரம் செய்து கொள்ளப்பட்டது. திருவாங்கூர் மகாராஜாவின் குலதெய்வம் அத்திங்கல் தேவி அல்லது பகவதியாகும். மகர மாதத்தில் 9, 10-ந்தேதிகளில் திருவாங்கூர் மகாராஜா பகவதியை சேவிப்பது வழக்கம். இன்றும் நாளையும் இந்த உற்சவம் இங்கு நடக்கிறது. ஆனால், மகாராஜா வராமலே இவ்வருஷம் இந்த உற்சவம் நடைபெறுகிறது.

* * * *

### புதுவை மேயர் சுடப்பட்டார்

சென்ற 24-ந்தேதி காலை புதுவை கத்தோலிக் மாதா கோவிலில் புதுவை மேயர் மோசியே ஜோஸப் தாவீது யாரோ ஒருவனால் துப்பாக்கியினால் சுடப்பட்டார். சுட்டவன் கைக்குட்டையினால் முகத்தை மறைத்துக்கொண்டு சுட்டானாம். குண்டு மேயரின் அடித்தொடைக்குள் பாய்ந்து அங்கேயே தங்கிவிட்டது. அவன் மற்றொரு தடவை சுட்டதில், குண்டு குறிமாறி சமீபத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு மாணவன் மீது பட்டு அவன் இறந்துவிட்டான். ஸ்ரீமான் தாவீது ஆஸ்பத்திரியில் சிகித்ஸை பெற்று வருகிறார். சுட்டவர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. போலீஸார் விசேஷ முயற்சி செய்து வருகின்றனர்.

* * * *


**தேனீ வளர்த்தலும் தேன் சேகரித்தலும்**

இத்தொழிலில் வருஷம் 1-க்கு 400 ரூபாய் சம்பாதிக்கலாம்

புத்தகம் விலை அணா 8.

**சாயத்தொழில் மாணவன்**

விலை அணா 4.

ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

சுதேசமித்திரன் புத்தகசாலை,

சென்னை

சரித்திரப்பகுதி




பம்பாய் சீக்கியர்கள் குருகோவிந்த சிங்கின் பிறந்த தினத்தைக் கொண்டாடினர். அப்பொழுது நடந்த ஊர்வலத்தின் காட்சி.

# எகிப்தியரின் பண்டைப்பெருமையும் தற்கால நிலையும்

—:[ o ]:—

உலகிலுள்ள ஏனைய நாடுகளெல்லாம் அஞ்ஞானம் எனும் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தபொழுது, மத்ய தரைக் கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளே நாகரிகத்தில் மிக்க மேம்பாடு அடைந்திருந்தன. கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே, ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடகோடியிலுள்ள எகிப்து தேசமானது எல்லா நலன்களும் பெற்றுத் தலை சிறந்து விளங்கிற்று. அரசியல் முறையிலும், பொருளாதார நிலையிலும், சமூக வாழ்க்கையின் தன்மையிலும் அதிக செல்வாக்குடன் இலங்கியது. அவ்வாறு ஆங்கு அரசு செலுத்தித் தேசத்தை நல்வழிப்படுத்தியவர்களுள் அகிநேடன் எனும் அரசனின் சரிதையைப்பற்றி ஈண்டு சொல்லுவாம். இதிலிருந்து இன்றைக்குச்சற்றேறக்குறைய 5000 வருடங்களுக்கு முன் எகிப்து தேசத்தினர் துணை நாகரிகம் பெற்றிருந்தனர் என்பது இனிது போதரும்.

கிறிஸ்து பிறப்பதற்கு 2000 வருடங்களுக்கு முன்பு எகிப்து தேசத்தில் அமினடோப் எனும் ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் காலத்தில் எகிப்து ராஜ்யமானது ஸினை தீபகற்பமுள்படத் தெற்கே ஸோமாலிலாந்து வரை பரவியிருந்தது. அவ்வரசனிடம் ஸூடான் பிரதேசத்தைச் சேர்ந்த கறுப்பு மனிதர்கள் அடிமைகளாக அமர்ந்திருந்தனர். பாலஸ்தீன தேசத்தரசனும் ஸிரியா தேசத்தரசனும் அவனுக்குக் கப்பம் கட்டி வந்ததோடு, கடற்கரையோரமாயுள்ள நகரங்களில் ஆண்டு வந்த சிற்றரசர்களும் வருடந்தோறும் அவனுக்குத் தங்கம், வெள்ளி, எண்ணெய், சாராயம் முதலியவைகளைக் கப்பமாகக் கொடுத்து வந்தார்கள்.

எகிப்தியர் அநேக நகரங்களில் கோவில்களைக் கட்டிப் பற்பல தெய்வங்களைத் தொழுது வந்தனர். ஆனால் ஒவ்வொரு நகரத்திலும் ஒரு தெய்வமே மற்ற தெய்வங்களைக் காட்டிலும் வெகு சிறப்பாகப் பூசிக்கப்பட்டு வந்தது. சிலவிடங்களில் ஜனங்கள் 'ஏபிஸ்' எனும் விருஷபத்தை வழுத்தினார்கள். சிலவிடங்களில் 'ஹோரஸ்' எனும் கழுகின் தலை கொண்ட ஒரு தெய்வத்தைக் கொண்டாடினார்கள். மற்றும் பலர் 'ஆஸிரிஸ்' எனும் கடவுளை வணங்கினார்கள். ஹெலியபாலிஸ் எனும் நகரில் ஜனங்கள் 'ராஹொராக்தி ஆடூன்' எனும் சூரியபகவானை பெரிதும் போற்றினர். ஆனால் தீப்ஸ் நகரிலுள்ளவர்கள் 'ஆமன்ரா' எனும் தெய்வத்தை விசேஷமாய்ப் போற்றித் துதி செய்தனர். அக்கோவிலிலுள்ள குருமார்கள் எகிப்து தேசத்திலேயே, மிகப் பொருள் படைத்தவர்களாயும் செல்வாக்குள்ளவர்களாயுமிருந்தனர். அவர்கள் எகிப்து மன்னனுக்குச் சட்டமியற்ற உதவி புரிந்தும் மற்றும் பல விஷயங்களில் புத்தி சொல்லியும் வந்தமையால் அந்நிய நாட்டு தூதர்களும் அவர்களின் விருப்பத்துக்கு விரோதமாகச் செல்ல அஞ்சினர். தெருக்களில் சென்ற ஜனங்களும், வர்த்தகர்களும், தொழிலாளர்களும், குடியானவர்களும் இக்குருமார்களுக்குப் பயந்து நடந்தனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த தீப்ஸ்நகரிலேதான் அமினடோப், தன் மனைவியாகிய 'திய்' என்பவளுடன் பல்விதச் செல்வங்களுக்கிடையே அரசு செலுத்தி வந்தான்.

அரசன் தனது பொற்றேரில் ஏறி, வீதிகளில் பவனி செல்லும்போது ஜனங்கள் சந்தோஷத்தினால் ஆரவாரித்து தேரின் சக்கரங்களின் கீழ் மலர்களைத் தூவி நின்று வணங்கினர். அவனுடைய அரண்மனையோ பலநிறப்பட்ட வர்ணங்களால் எழிலுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. விசாலமான கூடங்களில் அநேக மேஜைகள் தங்கக் கோப்பைகளையும் தங்கக் கூஜாக்களையும் தாங்கி நின்றன. அரண்மனையைச் சுற்றிலும் மலர்கள் நிறைந்த நந்தவனங்களும் அவைகளுக்கிடையே பல வாவிகளும் அமைந்திருந்தன. சில சமயங்களில் அரசன் மனைவியான திய் என்பவள் தன் மக்களுடன் ஒரு பெரிய ஏரியின்மீது உல்லாசமாகக் காலங்கழிக்கையில், அவள் பக்கத்தில் நின்ற அடிமைக்காரர்கள் பலர் அவளுடைய கரங்களில் பரிமளங்களைப் பெய்தும் மெல்லிய இறக்கையாலான விசிறிகொண்டு குளிர்ந்த காற்று உண்டாக்கியும் அவளுக்கு ஆனந்தத்தை விளைத்தனர்.

அமினடோப் சிம்மாசனத்துக்கு வந்து இருபத்தாறு ஆண்டுகட்குப் பின்னர் அவனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. பிறந்த குழந்தைக்கு அமினடோப் எனும் நாமகரணம் செய்தார்கள். அக்குழந்தை தீப்ஸ் நகரில் செல்வத்தினிடையேயும் ஆடல் பாடல்களினிடையேயும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

வயது முதிரவே, அவ்வாலிபன் தனது தாயாருடன் ஏரியின்மீது ஓடத்தில் சென்று அங்கிருந்து மலைவாயிலில் விழும் சூரியனுடைய அழகையும், சுற்றுமுள்ள குன்றுகள் பொன்னிறம் கொண்டிலங்கும் கவினையும் கண்டு களிப்புற்றான். எங்கு சென்றாலும் இயற்கை அன்னையின் வனப்பே அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அரண்மனையின் உட்புறத்துச் சுவர்களின்மீது வரையப்பட்டுள்ள பட்சி, மிருகம், செடி முதலியவற்றின் சித்திரங்கள் அவன் கருத்தை ஈர்த்து நின்றன. இயற்கையின் விசித்திர விநோதங்களைக் கண்டு களித்த அவ்வாலிபன், இவைகளுக்கெல்லாம் காரணபூதமாய் விளங்கும் பரம்பொருளைக் கருத்திலிருத்திச் சிந்திக்கலானான். நாளடைவில் எகிப்தியர் போற்றிவந்த தெய்வங்கள் அனைத்தையும் அவன் சந்தேகிக்கத் தலைப்பட்டான்.

ஒன்பது வயது ஆனதும் அவனுக்கு ஸிரியாவுக்கு வடக்கேயுள்ள மிட்டனி நாட்டரசனது பெண்ணைப் பெற்றோர்கள் மணம் செய்வித்தனர். அப்பெண் தீப்ஸ் நகருக்கு வந்ததும் அத்தேசத்தின் சம்பிரதாயத்திற்கேற்பத் தனது பெயரை நிபர்டிடி என்று மாற்றிக்கொண்டாள். அவள் மிக்க இளம் பிராயத்திலிருந்தமையால், அவளை வளர்த்த தாதி அவளுடனேயிருந்து பலவிதத்திலும் அவளுக்கு உவகை ஊட்டி வந்தாள்.

மணவினை முடிந்த சின்னாட்களுக்கெல்லாம், தன் தகப்பனாகிய அமினடோப் III இறக்கவே பத்து வயதுள்ள அந்த வாலிபன் பட்டத்துக்கு வந்தான். ஆகவே, அவனுடைய தாயாராகிய 'தியி' அரசியார் ராஜ்யபாரத்தை வகித்து வந்தாள். சிறுவயதினனான அமினடோப்பும் அவனுடைய மனைவியும் அன்னிய நாட்டினின்று வந்த கிரேக்கர்களோடும் பாபிலோனியர்களோடும் அளவளாவி, அவர்களின் தெய்வங்களைப்பற்றியும் அவர்கள் அனுஷ்டித்த பூஜை முறைகளைப்பற்றியும் அறிந்து கொண்டார்கள். கல்வி கேள்விகளில் முதிர்ச்சியடையவே, மனம் தெளியப்பெற்று தெய்வம் ஒன்றே என்ற உண்மையைக் கண்டான் அமினடோப் மன்னன். தான் கண்டு கொண்ட தெய்வத்தை 'ஆடன்' என அழைக்கலுற்றான். ஆடன் என்பது சூரியனுக்குள்ள பல பெயர்களுள் ஒன்று. இதிலிருந்து அவன் சூரியனைத் தொழுவான் எனக் கொள்ளுதல் தவறாகும். சூரியனைச் சிருஷ்டித்தவர் எவரோ, எவருடைய சக்தியினாலும் அனுக்கிரகத்தாலும் சூரியன் சொல்லுதற்கரிய ஜோதியுடன் பிரகாசிக்க இயலுகிறதோ, அவரே 'ஆடன்' எனும் பரம்பொருள் என நம்பினான். ஆடன் கடவுள் சாந்தமூர்த்தியென்றும் சத்திய மூர்த்தியென்றும், அன்புருவமென்றும் எல்லா ஜனங்களையும் பாதுகாக்கவல்ல தெய்வமென்றும் உபதேசித்தான். வெறும் பேச்சோடு அமையாது நடைமுறையிலும் காட்ட எண்ணி, எல்லோரிடமும் அன்பு பூண்டு எளிய வாழ்க்கையை மேற்கொண்டான். "இறைவனே அன்பு! அன்பே இறைவன்" எனும் தத்துவத்தையும் உயிர்கள்பால் அன்பு கொள்வதே உயர்ந்த மோட்ச சாதனம் எனும் நுண்ணிய கருத்தையும் கிறிஸ்து பிறப்பதற்கு 2000 வருடங்களுக்கு முன்னரே கண்ட பெருந்தகை அகிநேடன் என்பது ஒரு சிறிதும் மிகையாகாது.

மேற்கூறிய அபிப்பிராயங்களைக்கொண்ட அமினடோப் அரசன் தீப்ஸ் நகரிலுள்ள ஆமன்ரா தெய்வத்தின்மீது எகிப்தியர் கொண்டுள்ள பக்தியைக் கெடுக்கவும் அக்கோவிலில் தொண்டுபுரிந்த குருமார்களின் செல்வாக்கைக் குலைக்கவும் முயற்சித்தான். மற்றும் தன் பெயரை மாற்றி, 'அகிநேடன்' எனும் நாமத்தைப் பூண்டான். மேலும் இதுகாறும், தனக்கு வாசஸ்தலமாயிருந்த 'தீப்ஸ்' நகரை விட்டுத் தெற்கே போந்து நைல் நதிக்கரையின்மீது ஹொரைஸன் எனும் ஒரு புதிய நகரை ஸ்தாபித்துக்கொண்டான்.

அப்புதிய நகரம் சில காலந்தான் சிறப்புற்று விளங்கியது. ஏனெனில், அகிநேடனின் ராஜ்யம் வரவரச் சீர்குலைய ஆரம்பித்தது. எல்லைப்புறங்களில் ராஜத்வேஷமும் கலகங்களும் தலைதூக்கின. ஆனால், அரசன் ராஜீயக் கவலையின்றித் தான்நிர்மாணித்த புதிய நகரைப்பற்றியும் ஆடன் கடவுளைப்பற்றியும் சிந்தனையாயிருந்தான். வருடந்தோறும் அநேக நகரங்களும் நாடுகளும் எகிப்தின் எகாதிபத்யத்தினின்றும் விலகிக்கொண்டன. எகிப்து ராஜ்யம் சிதைவுறுகிறதே என்று பிரஜைகள் அலறினார்கள். ஆமன்ராவும் இதர தெய்வங்களும் தங்களுக்கு அரசனிழைத்த தீங்கின் காரணமாகக் கோபங்கொண்டனபோலும் என்றார் பலர். ஆமன்ராகோவிலைச் சார்ந்த குருமார்கள் ஒன்று சேர்ந்து அரசனுக்கு ஊறு விளைக்க எண்ணினார்கள். சில வருடங்களுக்குள் உலகத்தின்கண் மிகப் பெரிய ராஜ்யமெனப் போற்றப்பட்ட எகிப்து கேடுற்றுச் சின்னாபின்னமாகப் போயிற்று.

அதே சமயத்தில் அகிநேடனும் மண்ணுலகு விட்டு விண்ணுலகு எய்தினன். பிற்காலங்களில் எகிப்து தேசத்துக் குருமார்கள் அவ்வரசனைப்பற்றிப் பேசவும் கூடாதென உத்திரவு பிறப்பித்தனர். அன்றியும் அகிநேடனுடைய கல்லறையினின்றும் 'ஆடன்' எனும் மொழியை அகற்றி விடுமாறும் செய்தனர். என்னே! அவர்களின் ஆதிக்கம்! என்னே! அவர்கள் அரசன் மீது கொண்ட பகைமை!

இத்துணை நாகரீகம் படைத்த எகிப்து கி. மு. நான்காவது நூற்றாண்டில் கிரேக்கர்களின் ஆட்சிக்குட்பட்டுச் சுதந்தரத்தை இழக்க நேரிட்டது. பின்னர் ரோமானியர்கள் அதைத் தங்கள் சாம்ராஜ்யத்திற்குள் சேர்த்துக்கொண்டனர். கடைசியில் முகம்மதியர்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் எகிப்தைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர்.

கி. பி. 1876-ம் வருஷம் எகிப்தில் ஆண்ட இஸ்மைல் பாஷா என்பவன் ஆங்கிலேயர்களிடம் ஏராளமான தொகைகளைக் கடனாக வாங்கிச் செலவழித்து அவைகளைத் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையிலிருந்தபடியால், ஆங்கில சர்க்கார் எகிப்தின் ராஜீய விஷயங்களில் தலையிட்டுச் சீர்திருத்தங்களை இயற்றினர். சமீபத்தில் பிரிட்டிஷாருக்கும் எகிப்தியருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலம், எகிப்தியர்கள் ஆங்கில அரசியல் தளைகளினின்றும் விடுதலை பெற்றுத் தங்கள் பிறப்புரிமைகளை அடைந்திருக்கிறார்கள்.


வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

தனது ஸ்வகீயமான கட்டடங்கள்




## ஸித்த மகரத்வஜம்.

இதில் தங்கம் முதலிய உயர்ந்த வஸ்துக்கள் சேர்ந்திருப்பதால் முக்கியமாய் அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தி காமோத்தீபனத்தை விருத்தி செய்வதில் நிகரற்றது. அநேக காரணங்களால் பலத்தைக் கெடுத்துக் கொண்டவர்களுக்கு அத்யாவசியமானது. புரொபஸர் ராமமூர்த்தி, இந்தியன் ஹெர்குலிஸ், அவர்களால் ஸர்டிபிகேட் செய்யப்பட்டது. 30 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூ. 7. பரீக்ஷிப்பதற்கு 5 மாத்திரைகள் ரூ 1-4-0 வி. பி. வேறு.

## ஆனந்த பற்பொடி (ரிஜிஸ்டர்ட்)

பற்களை உறுதிப்படுத்தி வாயில் குவிந்துள்ள அழுக்குகளையும் நோய்க்கிருமிகளையும் போக்கி வாய்க்குள் அடங்காத ஓர் பரிமள வாஸனையையும் நலல ருசியுடன் ஆரோக்யமான ஓர் புதிய உணர்ச்சியையும் தருகின்றது. இது ஒன்று தான் பஜாரில் மிக்கப் பிரசித்திப் பெற்றதென்று சென்னை ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு செய்து இருக்கிறாகள். எங்கும் கிடைக்கும். டப்பி 1-க்கு 0-2-9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு 1—14—0. ஆனந்த பற்பசை டியூப் 1-க்கு அணா 8. வி. பி. வேறு.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

## கெற்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-விதமலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்தியசாலை,

146 புரசவாக்கம் ஹைரோட், சென்னை

தலைமை ஆபீஸ், பழனி

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரியின் மற்றும் சில மருந்துகள்—

எவ்வித ஜுரங்களுக்கும் ஜ்வரேத ஓர் அரிய ஔஷதம்

ஊக்கம் உற்சாகம் ஊட்ட ஊர்ச்சிப் அஜீர்ண, பித்தசமனி

குழந்தைகளுக்கு பாலக்ஸ் சுகபேதியாக

ஏஜெண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் தெரு, மதராஸ் (டில்லி, பம்பாய், ரங்கூன், கொழும்பு)

திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், ஈரோடு, திருப்பூர் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்க.



பிரபல ஆங்கிலப்பட நடிகர்

**மார்ரிஸ் ஷெவலியர்.**



நெதர்லண்ட் தேச இளவரசி ஜூலியானுவுக்கும் பெர்ன்ஹார்ட் இளவரசருக்கும் ஹேகில் சமீபத்தில் விவாகம் நடந்தது. மாதா கோவிலில் விவாகம் நடைபெற்ற காட்சி.



ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாகாண மந்திரி சபைக்குக் காரியதரிசி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் (மிஸ்டர் டன்ஸ்டன்) பிரமாணமெடுத்துக்கொள்ளும் காட்சி. இப்பதவி ஆஸ்திரேலியாவில் வேறு எந்த மாகாணத்திலும் இல்லை.



சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் யுத்த ஒத்திகையொன்று நடைபெற்றது. இராணுவ வீரர்கள் பீரங்கியை உபயோகிக்கும் காட்சி.



பிரெஞ்சு அபேதவாதிகள் கட்சி மகாநாடு சமீபத்தில் நடைபெற்றது. அதில் பிரெஞ்சு-சோவியத் உடன்படிக்கையை ரத்து செய்யவேண்டு
மென்று கர்னல் டிலா ரோக் பேசிய காட்சி.





ஸ்டாக்ஹோமில் ஸெனோரா இஸபெல்லா வாலன் ஸியா ஸ்பெயின் ஸ்தானீகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஸ்வீடன் அரசர் மாளிகையிலிருந்து வெளிவருகையில் எடுத்த படம். (வலது பக்கம்) இந்தியா கவர்ன்மெண்ட் ஆர்டர் கொடுத்து லண்டன் ஹார்லண்ட் அண்டு உல்ப் கம்பெனியார் கட்டிய 20 டன் கப்பல் ரங்கூனுக்கு அனுப்பப்படுவதற்காக பெல் பமீளா என்ற கப்பலில் ஏற்றப்படும் காட்சி.



புதுச்சேரியிலிருந்து கடல் மார்க்கமாய் வரி கொடாமல் சாமான்களைத் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்வதைத் தடுக்க சர்க்கார் உபயோகித்துவரும் 'சார்லஸ் ஹெண்டர்ஸன்' என்ற படகு

18729

அதிசய உண்மைக் கதைகள்

# கொற்றவனை மயக்கிய கள்ளப் பெண்

—— :[o]: ——

(ஸ்ரீமான் எஸ். ரங்கராஜ ஐயங்கார், எம். ஏ. பி. எல்.)

[இது சீன தேசத்துக் கதை. பனிரேண்டாம் நூற்றண்டின் மத்தியில் ஆண்ட சீன சக்கிரவர்த்தியின் மனதைக் கவர முயற்சித்தாள் ஒரு கொள்ளைக்காரனின் மகள். அதன் விளைவு கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது.]

"சக்கிரவர்த்தியின் சன்னிதானத்துக்கு வருவதென்றால் அது என்ன சாமான்யமா? நீ யார்? நீ எங்கிருந்து வருகிறாய்? என்ன காரியமாய் சக்கிரவர்த்தியைப் பார்க்கவேண்டும்?"

இப்படி மூச்சு விடாமல் வினவிய அரண்மனை உத்தியோகஸ்தனைத் தனது அழகிய கண்களால் நோக்கிய நாரீமணி, "என் பெயர் டக்கி. நான் ஒரு அவசியமான விஷயமாக சக்கிரவர்த்தியை நேரில் தரிசிக்க வேண்டும். தயவு செய்து என்னை அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்றாள்.

அவளது அற்புதமான அழகில் ஈடுபட்டு நின்ற உத்தியோகஸ்தனுக்கு என்ன செய்வது என்பது தெரியவில்லை. அவளது வேண்டுகோளை மறுப்பதற்கு அவனுக்கு இஷ்டமில்லை. எனினும் அவள் என்ன காரணமாய் சக்கிரவர்த்தியைப் பார்க்க விரும்பினாள் என்பதை அறியாமல் அவளை ஸன்னிதானத்துக்கு அழைத்துச் செல்வது முறையாகுமா?

அவனது தயக்கத்தின் காரணத்தை ஊகித்த அவ்வெழில் நங்கை, "நான் இயோருசியின் மகள். நான் ராஜாதிராஜனைக் கட்டாயம் காணவேண்டும். இனியேனும் யாதொரு தாமதமும் செய்யவேண்டாம்" என்றாள்.

உத்தியோகஸ்தனின் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது. "ஹா! இந்த ஆரணங்கு கொடிய கள்ளர் தலைவனின் மகளா? என்ன ஆச்சர்யம்? சேற்றில் செங்கமலம் முளைப்பதுபோலல்லவா இருக்கிறது இவள் அவனுக்கு மகளாய் வாய்ந்தது" என்று அவன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

இயோருசி என்பவன் சீனாவின் பெரிய கொள்ளைக் கூட்டத்தின் தலைவன். மகா சாமர்த்தியசாலியான அவன், ராஜாங்கத்தாருக்கு அகப்படாமல் நிர்ப்பயமாய் தன் தொழிலை நடத்திக்கொண்டிருந்தான். அவன் பெயரைக் கேட்டால் நாட்டிலுள்ள யாருக்கும் நடுக்கந்தான்.

உத்தியோகஸ்தன் யோசனை செய்தான். டக்கி தனது தக்ப்பனிடமிருந்து ஏதாவது முக்கியமான செய்தி கொண்டு வந்திருப்பாள் என்பது நிச்சயம். அவளைச் சக்கிரவர்த்தியிடம் கொண்டுவிடுவது அவசியம்தான். மேலும், அவள் தகப்பன் தேசவிரோதி. அவளை அரசர் சிறையில் வைத்தால், அவன் வழிக்கு வரக்கூடும்" என்று சிந்தித்த வண்ணம் அவன் கள்ளனின் மகளை சக்கிரவர்த்தி சியோஸியின் தர்பார் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றான்.

சூரிய சந்திராதிகளுக்கும் புவிக்கும் விண்ணுக்கும் அதிபதி என்று கொண்டாடப்பட்ட சீன சக்கிரவர்த்தி தேஜோமயமான சிம்மாஸனத்தில் வீற்றிருந்தான். முத்தும் மணியும் வைரமும் நற்பொன்னும் பதியப்பட்ட வேலைப்பாடுகளுடைய அற்புதமான சபா மண்டபத்தில் எங்கும் ஒளி வீசியது. ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அமைச்சரும், உயர்தர உத்தியோகஸ்தர்களும் தத்தம் ஆஸனங்களில் இருந்தனர்.

'மன்னவரின் மன்ன! நின் புகழ் என்றும் ஓங்குக' என்று கூறிப்பணிந்தவனைக் கவனிக்கவில்லை அரையன். அவன் பக்கத்தில் தந்தப் பதுமைபோல் நின்ற அழகுச் சோதிமீது அவனது நாட்டம் சென்றது. அவளது ஒப்பற்ற எழிலை அவன் தனது கண்களால் பருகினான்.

அப்பொழுது அவன் முன் மண்டியிட்டு தனது சிரத்தால் தரையில் வணங்கிய டக்கி, தனது இனிய குரலில், "அரசர் பெருமானே! இந்த அடிமையின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். என் பிதா இயோருசி தங்களது செங்கோலுக்கு மிகவும் தாழ்மையுடன் கீழ்ப்படிகிறார். அதற்கு அறிகுறியாகவே நான் ஸன்னிதானத்தின் முன்னால் நிற்கிறேன்" என்றாள்.

"பெண்மணி, உனது விருப்பத்தைச் செவியுற்று மகிழ்ந்தோம். உனது தகப்பனது பணிதலை ஏற்றுக்கொள்ளுகிறோம். உன்னை அந்தரங்கமாய் சந்திக்க என் மனம் விரும்புகிறது. நமது ஏகாந்த அரண்மனைக்கு நீ வரவேண்டியது. இதுவே என் உத்தரவு" என்று அன்பு ததும்பிய குரலில் மொழிந்தான் சக்கிரவர்த்தி.

அரசர்பிரான் தனது அடிமையாய்விட்டான் என்பதை ஒரு நொடியில் கண்டு கொண்ட டக்கியின் வெற்றிப் பூரிப்பை எப்படி விவரிப்பது?

அன்று முதல் சக்கிரவர்த்தி அவள் மையலில் ஈடுபட்டு அவளைத் தன்னுடனே வைத்துக்கொண்டான். அவளை விட்டு அவன் பிரிவதேயில்லை. சீனா நாட்டுக்கு உண்மை அதிகாரி அவளே. அவள் வார்த்தைக்கு மறு வார்த்தை கிடையாது. அவளது தயவை மந்திரிகளும் பிரதானிகளும் நாடி நின்றனர். அவள் வாயசைவதற்காகக் காத்துக்கொண்டிருந்தனர் உயர்தர உத்தியோகஸ்தர்களெல்லாம்.

டக்கி அரசியல் விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டு அவற்றையறிந்துகொள்வதில் அவள் பிரியப்படவுமில்லை. அவளது முக்கிய நோக்கம் தன்னால் எவ்வளவு பெரிய பொக்கிஷம் சேகரிக்க முடியுமோ அதைத் திரட்டவேண்டும் என்பதே. மேலும், மிகுந்த செலவாளியான அவளுக்குத் தன் காதலன் அளித்த பணம் போதவில்லை. ஆதலால், அவள் ராஜாங்கத்துப் பதவிகளையும் உத்தியோகங்களையும் விற்பனை செய்தாள். அவற்றைப் பெற விரும்பினோர் பலர் அவளது அரண்மனைக்கு வந்து பேரம் செய்தனர். அவளது மையலால் மதி மயங்கி[illegible] மன்னவனும் அவள் சிபார்சு[illegible] மனிதர்களுக்கு உ[illegible]ங்களையும் அளித்து அவளது பணப்பைகள் நிறம்பும்படிச் செய்தான்.

அவளுக்கென்றே ஏராளமான செலவில் ஒரு உன்னதமான அரண்மனை கட்டப்பட்டது. அதற்கு "மான்மகால்" என்று பெயர். மானின் நோக்கைப் பழித்த மங்கையரும் மன்மதனும் பொறாமை கொள்ளக்கூடும் ஆடவரும் கூடுவதற்காக அமைக்கப்பட்ட அந்த இடத்துக்கு அப்பெயர் வைக்கப்பட்டது பொருத்தமேயாகும். அங்கே எப்பொழுதும் கேளிக்கையும் கோலாஹலமுந்தான். அங்கே கூடிய அழகிய பெண்களும் புமான்களும் விருந்திலும், ஆட்டத்திலும், பா[illegible]லும் பலவிதமான லீலைகளிலும் தங்கள் காலத்தைச் செலவழித்தனர். சிற்றின்பத்தின் நிரந்தர வாசஸ்தலமான அந்த அரண்மனையில் ஏகபோக சக்கிரவர்த்தினியாய் வீற்றிருந்த டக்கியின் ஆடம்பரமான வாழ்க்கையை விவரமாய்க் கூறுவதற்கு இங்கு இடமில்லை. ஆயினும் எதற்கும் ஒரு வரம்பு வேண்டும். கள்ளனின் மகள் அதை மீறிவிட்டாள். மான்மகாலில் நடைபெற்ற சிற்றின்ப ஆர்ப்பாட்டங்கள் பிரஜைகளுக்குத் தாங்கமுடியாத வெறுப்பையும் ஆத்திரத்தையும் மூட்டின. சீன தேசத்தினரே புனிதமான வாழ்வை நடத்தும் மனத்தினர். அதிலும் ஸ்திரீ புருஷ ஸம்பந்தங்களைப் பற்றிமட்டும் அவர்கள் கடுமையான விதிகளை அனுஷ்டிப்பவர்கள். விபசாரத்தையும் சோர நடத்




பொதுவுடமை பிரசாரத்தை எதிர்த்து ஹிகிங்கில் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்தது. அது சம்பந்தமான ஊர்வலத்தை இந்தப் படத்தில் காணலாம். பொதுவுடமையை எதிர்க்கவே ஜப்பானும் ஜெர்மனியும் சமீபத்தில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது.

தையையும் அவர்கள் விஷமென வெறுப்பவர்கள். ஆதலால் டக்கியால் நடத்தப்பட்ட சிற்றின்ப தர்பாரை ஒழித்துவிட அவர்கள் பரபரப்புக் கொண்டதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

"சக்கிரவர்த்தியோ புத்தியை யிழந்து டக்கியின் அடிமையாய்க் கிடக்கிருன். அவனை எப்படி மீட்பது?" என்று சிந்தித்தான் நாட்டின் நலத்தை விரும்பிய மந்திரிகளில் ஒருவன். உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அவனுக்குத் தெரிந்தவர்களில் ஒருவனின் மகள் கந்தர்வ மங்கையோ என்று யாரும் மயங்கும்படியான பேரெழில் வாய்ந்த நங்கை. அவளை அரசனின் முன்பு கொண்டு நிறுத்தினுல், அரசனின் மோகம்...டக்கி மீது கொண்ட மோகம்...மாறக் கூடும்.

உடனே அந்த அழகிய பெண் அரசனது ஸன்னிதானத்துக்குக் கொண்டுவரப்பட்டாள். அவளது தெய்வீகமான வனப்பைக்கண்டு அரசன் ஆச்சர்யமுற்ருன். அவன் பக்கத்தில் இருந்த டக்கி, அவனது நோக்கத்தையுணர்ந்து புன்னகை புரிந்து, "மன்னவ, இந்தப் பெண் உங்களுக்குத் தகுந்தவளா என்பதைப் பரீக்ஷை செய்து விடுகிறேன்" என்று அவளைத் தன்னுடைய மகாலுக்கு அழைத்துச் சென்ருள்.

அரண்மனையில் நடைபெற்ற சிற்றின்ப வேட்டைகளைக் கண்ணுற்ற இளநங்கையின் மனம் சகிக்கொணுத பயத்தாலும் துயரத்தாலும் வெதும்பியது. ஆனல் டக்கியின் உத்தரவால், அவள் அவற்றில் கலந்துகொள்ள நேரிட்டது. புனிதமான அவளது மனமும் மெய்யும் களங்கமாய்விட்டன. பின்னர் அவள் டக்கியின் உத்தரவால் சித்திரவதை செய்யப்பட்டதுடன் அவளது அங்கங்கள் துண்டுதுண்டாக வெட்டப்பட்டு அவளது பெற்ருேருக்கு அனுப்பப்பட்டன. இப்படியாக முடிந்தது கள்ளன் மகளைச் சக்கரவர்த்தியிடமிருந்து பிரிப்பதற்காக அனுப்பப்பட்ட பெண்ணின் கதி.

இந்த அக்கிரமங்களைச் சகிக்காத பிரஜைகள் கிளர்ச்சி செய்தனர். புரட்சிக்காரர்கள் ஒரு பெரிய படையைத் திரட்டினர். அவர்களுக்குப் பிரபு குடும்பத்தினனுன வெள்வாங் என்பவன் தலைவனுனன்.

சக்ரவர்த்தியின் மதியீனத்தால் அரசாங்க நிர்வாகமேமிகவும் ஊழலான நிலைமையிலிருந்தது. புரட்சிக்காரர்களை அடக்குவதற்குக்கூடச் சரியான அதிகாரிகள் இல்லை. மன்னவன் சேனையும் புரட்சிக்காரர்களுடன் கலந்துகொண்டது. வேந்தர் வேந்தனை செளலிங் சார்பாகச் சண்டை போடக் கூடியவர் நாட்டில் யாருமில்லை. கலகக்காரர்கள் டக்கியின் மாளிகையை முற்றுகையிட்டனர். "எங்கே அந்தத் திருட்டுப் பயலின் மகள்? எங்கே அந்த அறிவிழந்த செளலிங்" என்ற ஆரவாரம் நாலா பக்கங்களிலும் பரவியது.

மன்னவன் தனது நிலைமையை உணர்ந்துகொண்டான். உடனே அரண்மனையிலுள்ள வேலைக்காரனையழைத்தான். எனக்குச் சொந்தமான விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் மீதி எல்லாச் சாமான்யும் கொண்டு வா. அவற்றைக் கொண்டு ஒரு பெரிய தீயை மூட்டு" என்று உத்தரவிட்டான்.

தீ மூட்டப்பட்டது. மன்னனின் உத்தரவால் ஆஸ்தான மணியும் அடிக்கப்பட்டது. தன்னுடைய முழு உடைகளையும் அணிந்து கிரீடத்துடனும் செங்கோலுடனும் நின்ற கொற்றவன், "யாவருக்கும் அதிபதியாகிய நானு அற்ப மனிதர்களிடம் அகப்பட்டுக் கொள்ளுவது? அதைவிடத் தீயில் மூழ்கி என் முன்னேரை நாடிச் செல்வதே மேல்" என்று சொல்லிக்கொண்டே அக்னியில் குதித்தான்.

டக்கியின் அரண்மனையில் புகுந்த கலகக்காரர்கள் அவளை ஆவலுடன் தேடி இங்கும் அங்கும் ஓடினர். ஆனல் அவள் அகப்படவில்லை.

அவள் எங்கே?

தனது அழகில் நம்பிக்கை கொண்ட அவள் மற்ருெரு வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டாள். அவளது பல்லக்கு வெளவாங்கின் பாசறையையடைந்தது. அதிலிருந்து இழிந்த அவள், புரட்சிக்காரர்களின் தலைவனைச் சந்தித்தாள். "குற்றம் என்மேல் இல்லை. மன்னவனுக்கு நான் அடிமை. அவன் விருப்பத்துக்கு மாருக என்னுல் என்ன செய்ய இயலும்? எல்லா அட்டூழியங்களுக்கும் அவனே காரணம்" என்று கூறியவண்ணம் அவனைப் பரிதாபகரமாய் நோக்கினுள். அவளது கூரிய கண்கள் அவனை வசப்படுத்த முயற்சித்தன.

ஒரு நிமிஷம் தயங்கினுன் வெளவாங். அவளது அற்புத அழகு அவனுக்கு மதிமயக்கத்தை உண்டுபண்ணியது. எனினும் மறுநிமிஷமே அவன் தன் சுயபுத்தியை மீட்டுக் கொண்டான்.

"பெண்பேயே! என் முன் நில்லாதே! அப்பால் போ" என்று உத்தரவிட்டான் அவன்.

இனி தன் கதி என்னவென்பதை உணர்ந்துகொண்டாள் கள்ளனின் குமாரி. எனினும் அவள் சற்றும் பயப்படவில்லை. புன்னகை ததும்பிய முகத்துடன் அவள் வெளியே வந்தாள். கத்தியுடன் அவளை எதிர்பார்த்து நின்ருன் ஒரு வேலைக்காரன். அவளது கைகால்கள் பிணிக்கப்பட்டன. ஒரே ஒரு கத்தி வீச்சு தான். மறு விநாடி அவளது அழகிய தலைபூமியில்உருண்டது

"திருடர்கள் தலைவன் மகள் டக்கி சிரச்சேதம் செய்யப்பட்டாள்" என்ற செய்தி உடனே ஜனங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.


THIS IS NOT A HAIR-DYE




உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா?—அதனுல் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தென்படுகிறதா?—அப்படியாயின உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக் காள்ளாதிர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

Obtainable from:—

அப்பா & கம்பெனி, சைனுபஜார் ரோட், மதராஸ் வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ் டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, பெங்களூர் சிடி & கண்டேன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.

Further Inquiries to:—

KESHKALA CHEMICAL CO. P.O. Box No. M)5506. Bombay, 14.




10 வருஷம் உத்திரவாத முள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்கள் குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்,

187, சைனு பஜார் ரோட். ஜி டி

மதராஸ்

'EVEREST' COPYING & LEAD PENCILS &

EVEREST Carbon Papers are the best in the Market. Try once.

Sole Distributors in INDIA.

P. R. NATHAM & Co., High Class Stationers.

Phone 2305 China Bazaar Road, MADRAS.

குமார சஞ்சீவினி

ரிஜிஸ்டர்ட்

குழந்தைகளின்

ஈரல்-குலை-ஜுரக்கட்டி

வியாதிகளுக்கு

நிகரற்ற குணமுடையது

வைத்தியர். அண்ணுமலை முதலியார்

வைத்தியர் அண்ணுமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



இத்தாலியின் கடற்படையைச் சமீபத்தில் பார்வையிட்ட ஸீனர் முஸோலினி சிரித்த முகத்துடன் தளகர்த்தர் ஹார்த்தியுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

---

### ஹாலண்டு ராணி உயிர்தப்பினார்

ஹாலண்டைச் சேர்ந்த வில்ஹெல்மினா ராணி சமீபத்தில் ஒரு பேராபத்தினின்றும் உயிர்தப்பினார். அவர் சென்றுகொண்டிருந்த மோட்டார் திடீரெனச் சருக்கி ரஸ்தாவின் ஓரமாகவுள்ள அறுநூறு அடி பள்ளத்தில் விழவிருந்தது. அவருடன் காவலாகச் சென்ற போலீஸ் அதிகாரி சரேலெனப் பாய்ந்து தமது முழுப் பலத்தையும் கொண்டு அதைப் பள்ளத்திலிருந்து விழாது தடுத்தார். பிறகு அது மற்றொரு போலீஸ் அதிகாரியின் உதவி கொண்டு நடுரஸ்தாவுக்குக் கொண்டுவரப் பட்டது. பிறகு ராணி அதே கட்டு... மோட்டாரில் மேற்கொண்டு பிரயாணம் செய்தார்.

* * * *

### சிறையில் கைதிகள் கலகம்

ஒன்டாரியோ சிறையில் வெகு கோரமான கலகம் ஒன்று நடந்தது. இதில் 700 கைதிகள் கலந்துகொண்டனர் 150 கைதிகள் தப்பியோடிவிட்டதுடன் 40,000 பவுன் பெறுமான சொத்தும் நாசமாகிவிட்டது. கைதிகள் இரும்புக் கட்டில்களை உடைத்து அத்துண்டுகளைக்கொண்டு அதிகாரிகளைப் பயமுறுத்தி அவர்களைச் சிறைக்காரியாலயத்தில் அடைத்துவிட்டனர். தப்பியோடியவர்களில் பலர் அகப்பட்டுவிட்டனர். இன்னும் 40 பேர் அகப்படவில்லை.

* * * *

### செழிப்புக்கிடையே வறுமைத் துன்பம்

மிஸ்டர் ரூஸ்வெல்ட் யுனைடெட் ஸ்டேட்ஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பற்றிய பிரகடனம் மீண்டும் வாஷிங்டனில் படிக்கப்பட்டது. அப்பொழுது மிஸ்டர் ரூஸ்வெல்ட் பேசுகையில் செழிப்புக்கிடையே வறுமைத் துன்பத்தையும் அநீதிகளையும் ஒழிக்கத் தம்மாலானவரை முயலுவதாக உறுதி கூறினார்.

* * * *

### அபிஸீனியரை எதிர்க்க இத்தாலியர் ஏற்பாடு

[illegible] கிரேஸியானி [illegible] தலைமைக் காரியாலயத்தை அட்டிஸ் அபாபாவிலிருந்து இராகேலுக்கு மாற்றிவிட்டார். மீண்டும் இத்தாலியத் துருப்புகளுக்குத் தலைமைவகித்து பெருவாரியாகத் திரண்டுள்ள அபிஸீனியத் துருப்புகளுடன் போர் புரிவதே அவரது நோக்கமாகும். அத்துருப்புகளுக்கு ராஸ் டெஸ்டா சேனாதிபதியாக இருந்து வருகிறாராம்.

இது சம்பந்தமாக பின்னிட்டுக்கிடைத்த செய்தி கூறுவதாவது:—

ராஸ் டெஸ்டாவின் படை ஜெனரல் கிரேஸியானியின் துருப்புகளால் முறியடிக்கப்பட்டது. இதன்பேரில் இப்பொழுது ராஸ்டெஸ்டா தனது படையுடன் கெனியாவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்.

அப்படையினரைத் துரத்திச் செல்ல ஜெனரல் கிரேஸியானி நான்கு இத்தாலியப் படைகளை அனுப்பியிருக்கிறார். அப்படைகளைச் சேர்ந்த விமானங்கள் எதிரிகள்மீது வெடிகுண்டுகளைப் பொழிந்து வருகின்றன.

அபிஸீனியத் தலைவர்களில் ஐவர் சிறைபிடிக்கப்பட்டதுடன் ஏராளமான யுத்த தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இத்தாலியப் படையில் பெரும்பாலோர் லிபியாவைச் சேர்ந்த துருப்புகள்.

* * * *

### விபசார விடுதிக்கு மனைவி விற்பனை

27 வயதான மிஸ்டர் ஹிரோஷி வாடனாப் என்பவர் டோக்கியோ நகர சபைத் தேர்தலில் அபேட்சகராக நிற்க விரும்பினார். நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்ய 12 பவுன் (டிபாஸிட்) கட்ட வேண்டியிருந்தது. அவர் எவ்வளவோ முயன்றும் பணம் கிடைக்கவில்லை. கடைசியாக அவர் ஒரு வர்த்தகக் கம்பெனியைப்போல் நடித்து வந்த ஒரு ஸ்தாபனத்திடம் தமது மனைவியை 12 பவுனுக்கு விற்றுவிட்டார். அதாவது, அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் அம்மாதை ஐந்து வருஷகாலம் வேலைக்கு வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டு அவளுடைய சம்பளத்தில் 12 பவுன் அட்வான்ஸாகக் கொடுத்தனர்.

மிஸ்டர் வாடனாப் அப்பணத்தைக் கொண்டு தேர்தலில் ஈடுபட்டு வெற்றியடைந்தார். அந்த ஸ்தாபனம் ஒரு விபசார விடுதியெனப் பிறகு தெரியவந்தது. மிஸ்டர் வாடனாப்பின் கட்சியைச் சேர்ந்தவர்கள்; அவருடைய மனைவியை விபசார விடுதியிலிருந்து மீட்பதற்கான பணத்தைத் தங்களிடையே வசூலித்துக் கொடுத்தனர்.

* * * *

### ஜப்பானிய பார்லிமெண்டில் அமளி

ஜப்பானிய பிரதம மந்திரியான ஹிரோடாவின் வேண்டுகோளின் பேரில் மன்னர் ஒரு அறிக்கையைப் பிறப்பித்துள்ளார். இதன்படி பார்லிமெண்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ராஜீயக் கட்சிகள் சர்க்கார்பால் காட்டிவரும் விரோதப் போக்கைக் கைவிட அவைகளுக்கு அவகாசமளிப்பதே இவ்வறிக்கையின் நோக்கமாகும். மிஸ்டர் ஹெமாடா என்பவர் ஸியுகே கட்சியைச் சேர்ந்த ஒரு பிரமுகர். அவர் விடுத்த ஒரு பிரசங்கம் காரணமாக நிலைமை மிக்க நெருக்கடியானதாகிவிட்டது. அப்பிரசங்கம் ராணுவத்தை அவமதிப்பதாகுமென யுத்த மந்திரியான ஜெனரல் டோராசி தெரிவித்தார். இதன்பேரில் பிரதிநிதிகள் சபையில் மந்திரிகள் பேசுகையில் அவர்களைக் கேலிசெய்யும் முறையில் அங்கத்தினர்கள் கோஷம் செய்தனர். பிரதமமந்திரி ஒரு

ESTD. 1893.

சவரன்மாத்து தங்க நகைகளும்
முதல் தரமான வைரங்களும்
அசல்வெள்ளி சாமான்களும்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸீ சபீல்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்
112, சைனாபஜார் ரோட்டு மதராஸ்



கலகத்தாவில் நடைபெறும் மாகாண தேர்தலில் ஸ்திரீகள் அதிக சிரத்தை காட்டுகின்றனர்.

கேள்விக்குப் பதிலளிக்க முயன்றபோது அவர் பேச முடியாதபடிக் கூச்சலிட்டுத் தடுத்துவிட்டனர்.

பார்லிமெண்டு பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் சர்க்கார் பாஸிஸ்டு இயக்கத்துக்கு இடங்கொடாதிருப்பதுடன் அரசியலிலும் அந்நிய விவகாரங்களிலும் ராணுவ அதிகாரிகள் தலையிடுவதைத் தடுக்க வேண்டுமென்றும் முக்கியமான ராஜீயக் கட்சிகள் வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது. கடைசியாகக் கிடைத்த செய்தியிலிருந்து ஜப்பானிய பார்லிமெண்டு கலைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

* * * *

### சர்வாதிகாரிகள் சந்திப்பு

ஜெர்மனிக்கு விஜயம் செய்யுமாறு ஸீனர் முஸோலினிக்கு ஹெர் ஹிட்லர் ஹெர் கோயரிங் மூலம் அழைப்பு அனுப்பியிருக்கிறார். இதுபற்றி ஸீனர் முஸோலினி ஆலோசித்து வருகிறார். இத்தாலியிலிருந்து வெளியேறுவதில்லையென்ற தமது விதியை அவர் இச்சமயம் மீறுவாரென்பது சந்தேகமாகவே இருக்கிறது.

* * * *

### அமெரிக்காவில் லக்ஷக்கணக்கான மக்கள் துன்பம்

அமெரிக்காவில் வெள்ளத்தினாலும் தீயினாலும் லக்ஷக்கணக்கான மக்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர். வெள்ளத்தால் மொத்தம் பன்னிரண்டு மாகாணங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமானவர்கள் நீரில் மூழ்கி உயிர் துறந்ததுடன் கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாகிவிட்டன.

ஒஹியோ நதிக்கரைகளில் வசிப்போரில் 2 லக்ஷம் பேர் இப்பொழுது தங்க இடமின்றித் திண்டாடுகின்றனர். மிஸிஸிப்பி பள்ளத்தாக்கிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் வீடிழந்து வெகு பரிதாபகரமான நிலையிலிருந்து வருகின்றனர். அங்கு நூற்றுக்கணக்கான மைல்கள் விஸ்தீர்ணமுள்ள பிரதேசங்கள் வெள்ளத்தில் ஆழ்ந்திருக்கின்றன.

ஸின்ஸினாடி, லூயிவில், மெம்பிஸ் முதலிய இடங்களில் வெள்ளக்கொடுமை இன்னும் அதிகரித்து வருகிறது. ஸின்ஸினாடியில் பல தெருக்கள் 18 அடி ஆழத்தில் மூழ்கியிருக்கின்றன.

வெள்ளக்கொடுமை ஒருபுறமிருக்க ஜனங்களிடை இன்புளுயன்ஸா, டைபாய்ட் ஜுரங்களும் பரவி வருகின்றன. வெள்ளப் பிரதேசங்களில் யாராவது கொள்ளையடிப்பதைக்கண்டால், உடனே அவர்களைச் சுட்டுத்தள்ளுமாறு அங்குள்ள போலீசாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஸின்ஸினாடி மாகாணத்திலுள்ள ஸ்டாண்டர்ட் ஆயில் தொழிற்சாலையில் தீப்பற்றியது. மூன்றரை மைல் நீளம் அரை மைல் அகலம் ஒரே ஜ்வாலை மயமாகவிருந்தது. அத்தொழிற்சாலை இருந்த தெரு முழுவதும் நிர்மூலமாகிவிட்டது. ஐந்து லக்ஷம் காலன் பெட்ரோல் கொண்ட டாங்கிகள் தீப்பற்றி வெடித்து அழிந்து விட்டன. இதனால் பத்து லக்ஷம் டாலர் நஷ்டமேற்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

* * * *

### சோவியத் ஆட்சியை வீழ்த்தச் சதி

சோவியத் சர்க்காருக்கு விரோதமாகச் சதிசெய்ததாக 17 பேர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டு மாஸ்கோவில் அவர்களது விசாரணை ஆரம்பமாயிற்று. எதிரிகள் அனைவரும் முன்னர் சோவியத் அரசாங்கத்தில் உயர்பதவி வகித்தவர்கள். விசாரணையில் அவர்களெல்லாரும் தாங்கள் குற்றவாளிகள் என ஒப்புக்கொண்டனர். அவர்கள்மீது பின்கண்டவாறு குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது:—

“சோவியத் ஆட்சியைத் தகர்க்கவும் ஜெர்மனி, போலந்து, ஜப்பான் இவைகளுக்கு உதவிசெய்யவும் மிஸ்டர் டிராட்ஸ்கி உற்பவித்த சதியில் எதிரிகள் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

“இது சம்பந்தமாக மிஸ்டர் டிராட்ஸ்கி பெர்லினில் ஹிட்லரின் காரியதரிசியுடன் கலந்து பேசினார். எதிரிகள் ரஷ்யாவில் டிராட்ஸ்கியின் ஏஜண்டுகளாகவிருந்து வந்தார்கள்.”

“அந்நியநாடுகளின் சார்பாக இத்தேசத்தில் உளவறியவும், புரட்சி நடத்தவும் ரஷ்யாவில் மீண்டும் முதலாளி ஆட்சிமுறையை ஸ்தாபிக்கவும் எதிரிகள் முயன்று வந்தார்கள்.

இக்குற்றச்சாட்டுகள் பற்றிய சட்டத்தின்படி எதிரிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

* * * *

### தென்னாப்பிரிக்காவில் கலப்பு விவாகத்துக்குத் தடை

கேப்டவுன், பார்லிமெண்டு கூட்டத்தில் கலப்பு விவாகத் தடை மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டு அது பரிசீலனைக்-கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று பிரேரணை கொண்டுவரப்பட்டது. இந்த மசோதா தென்னாப்பிரிக்கா இந்தியரிடை விசேஷப் பரபரப்பை விளைவித்திருக்கிறது. ஐரோப்பியர்களும் சுதேசிகளும், ஐரோப்பியர்களும் ஆசியாக்காரர்களும் விவாகம் செய்து கொள்வதைத் தடுப்பதே மசோதாவின் நோக்கமாகும்.

மந்திரியான மிஸ்டர் ஹாப்மியர் (இந்தியாவுக்கு விஜயம் செய்த நல்லுணர்ச்சித் தூதுக் கோஷ்டித் தலைவர்) தமது சொந்த ஹோதாவில் இதை எதிர்க்கையில், இம்மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம், “நாம் அந்த உன்னதமான இந்திய மக்களின் மனதைப் புண்படுத்தியவர்களாவோம்” எனக் கூறினார். இத்தகைய கலப்பு விவாகங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறதென்றும் சென்ற 11 வருஷங்களில் வருஷமொன்றுக்குச் சராசரியாக நான்கு விவாகங்கள் தான் நடந்திருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:—இந்தியா 30 கோடி மக்க[illegible] ஒரு பெரிய நாடு. அவர்களில் பெரும்பாலோர் நாகரீகத் துறையில் முன்னணியிலிருப்பவர்கள். அது சீரும் பெருமும் பெற்ற உன்னதமான தேசம். எதிர்காலத்தில் அது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மட்டுமின்றி உலக முழுதிலுமே முக்கியமாக விளங்குவது திண்ணம். எனவே, இம்மசோதாவை நிறைவேற்ற வேண்டாமென நான் எச்சரிக்கிறேன்.

இந்தியருக்கு இதைவிட அதிக ஆத்திரமூட்டத்தக்க ஒரு மசோதாவைத் தயாரிப்பது அசாத்தியமென ஒருவர் பேசினார். மசோதாவைப்பற்றிய விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

* * * *

### அலக்ஸாண்டிரட்டா தகராறு

அலக்ஸாண்டிரட்டா பற்றிய தகராறு சம்பந்தமாகப் பிரெஞ்சு—துருக்கி இருதேசங்களுக்குள் ஒரு சமரஸ ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**ஜோதிஷ மகுட வர்த்தனர்**

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-ஸ்ரீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் “உலக சிரேஷ்டர்” என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ் ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.

**கிரஹலக்ஷ்மி**

(ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை)

பிரபலஸ்தர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளும், கதைகளும், பாட்டுகளும் நிறைந்து விளங்கும் ஸ்திரீகள் பத்திரிகை. பல வர்ணப்படங்களும், சித்திரங்களும் சிறந்து விளங்கும். ஒவ்வொரு ஸ்திரீயும் வாசித்து இன்புறவேண்டியது.

வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 4.

ரங்கூன் ஏஜண்டு:

வி. பகவதி சாஸ்திரி, 244, பயர் தெரு, ரங்கூன்.

பிரசுரிப்பவர்:

**கிரஹலக்ஷ்மி காரியாலயம், எழும்பூர், சென்னை.**



தேவலிரா டப்ளினிலிருந்து லண்டனுக்குப் புறப்பட்ட போது ஸ்டேஷனில் எடுத்த படம்.



கோடம்பாக்கம் ஹரிஜனத் தொழிற்சாலைக்கு மகாத்மா காந்தி விஜயம் செய்தார்.

# நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி



அகில இந்திய பிராம்மண மகா சபையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் ஸ்ரீமான் எம். கிருஷ்ணசாமி அய்யர் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.



காஞ்சிபுரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்திரீகள் சங்கத்தை மிஸஸ் பி. கே. வட்டால் திறந்துவைத்தார்.

## MUCH PLEASED

சென்னை (சாம்பியன் ரீட்ஸ்)யிலிருந்து மிஸ்டர்..... 24—9—36ல் எழுதுவது.—"வசிகரன் மூலிகை" ரொம்ப திருப்தியளித்தது; விசேஷ பலன் கிடைத்தது. இரண்டாவது நல்ல.....
"தீமேபத மூலிகை யால் கடு கண்டவை சித்தயாகின்றன, லா யோகியின வரப்பிரசாதம



வசீகரம், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் அனபமயமான காதலை உடனே விளைவிக்கும் இதை அணிவா அதன ஆச்சரிய சக்தியை விரைவில அறிவர். விலை ரூபா 3-8-0
2. வியாபாரமும், தொழிலும்:— நிச்சயமான தொழில விருத்தியும இலாபமும் சித்திக்கும் விலைரூ 3-8-0
3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயம் விலை ரூ 3-8-0
4. வியாதிகள்:— முடியாமதனை கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும் விலை ரூபா 3-8-0 5 உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும உத்தியோக மேன்மையும் நிச்சயம் விலை ரூ 3-8-0 6 பரீக்ஷைகள்: எவ்வித பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0
7 சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும இதை அணிபவா முன முழந்தாளிட்டுப் பணிவா விலை ரூபா 3-8-0
8 கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும் விலை ரூ 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவாகள் மாத்திரம் தஙகள் நோக்கம இன்னதென்பதைக் குறித்து எழுதவும் ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினுல் தபால் சார்ஜ உள்பட ரூ 9-6-0

**BIJOYA LODCE, (S M W.)**
P. O SALKIA HOWRAH

---

## வலுவாகவும்,

## நிரந்தரமாகவும், பத்திரமாகவு மிருக்க இரும்பையே கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு

## டாடா இரும்பையே

கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும் வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் இருக்கின்றனர்.

## Tata Iron & Steel Co., Ltd.,

18 எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

தந்தி: "IRONCO MADRAS" போன்: 2701

---

## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். அதோடு விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள் அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12 நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ 3 ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனும்.
சீயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி (மெடிகல் டிபார்ட்மெண்டு. 15).
பவானிப்பூர், — கல்கத்தா
மதராஸ ஸ்டாக்கிஸ்டு:—
ஜே ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனுபஜார் ரோட்,
ஸ்ப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி டி மதராஸ்
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

---

## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5, எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு அணு 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்

---

## ரூ. 500 இனும்!

### திமிர்குஷ்டமும், வெணகுஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுககு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பலபல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீமகளும் கைவிட்டதானுல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ 4. தபால செலவு தனி

**SRI SWAMI & Co,**
(34) Panchpota, Bengal.

---




---



6 அணு அனுப்பினுல் 24 அங்குல தசாவதார கலர் மாலை அனுப்பப்படும்.

**யூனிவர்ஸல் ஏஜன்ஸி**
P B No 28 சென்னை

---

